Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 12 ஞாயிற்றுக்கிழமை (24-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:91

### குடாநாட்டு மக்களது சமாதான அவாவின் உணர்வுபூர்வ வெளிப்பாடு

# நேற்றைய சர்வமத பாதயாத்திரையில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு!

### நல்லூரில் இருந்து தெல்லிப்பழை நோக்கி இன்றும் தொடர்ந்து நடக்கும்

யாழ்ப்பாணம்,பெப்ரவரி24

**ஊர்காவற்றுறை சின்னமடு மாதா ஆலயத்திலிருந்து நேற்று ஆரம்பமான சர்வமத சமாதானப் பாதயாத்திரையில் குடாநாட்டு மக்கள் பல்லாயிரக்கணக்கில் அணிதிரண்டு வந்து பங்கேற்று தங்கள் சமாதான அவாவை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியிருக்கின்றனர்.**

இந்த யாத்திரை இரண்டாவது நாளான இன்று நல்லூரிலிருந்து தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் நோக்கிச் சென்று அங்கு நிறைவு பெறும்.

இன்றைய யாத்திரையில் மேலும் பெரும் எண்ணிக்கையானோா அணிதிரள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் முழு ஒத்தாசையுடன் சர்வமதத் தலைவர்களின் தீவிர முயற்சியால் இந்த சர்வமத சமாதானப் பாதயாத்திரைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதற்காக 'சமாதானத்திற்கான சர்வமதப் பாதயாத்திரை ஒழுங்கமைப்புக் குழு' என்ற பெயருடன் ஒருங்கிணைந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

சர்வமத சமாதானப் பாத யாத்திரை நேற்றுக்காலை 9.30மணிக்கு ஊர்காவற்றுறை சின்னமடுமாதா ஆலயத்தில் இருந்து ஆரம்பமானது. அதற்கு முன்பாக அங்கு பிரார்த்தனை ஒன்றுகூடலும் சர்வமதத் தலைவர்களின் ஆசியுரைகளும் இடம்பெற்றன.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் தலைமையில் நடைபெற்ற பிரார்த்தனை ஒன்றுகூடலைத் தொடர்ந்து பாதயாத்திரை ஆரம்பமானது.

முன்னதாக மாதா ஆலய முன்றிலில் நடைபெற்ற பிரார்த்தனையில் புனிதவளன் ஆச்சிரம ஸ்தாபகர் அருட்திரு ஜெயசீலன் அடிகளார், யாழ்.இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் முரளிதரக் குருக்கள், ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் பாலச்சந்திரக் குருக்கள், தென்னிந்தியத் திருச்சபை பேராயர் எஸ்.ஜெபநேசன், யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜே.பி. ஈ.செல்வராஜா ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

தொடர்ந்து சமாதானத்தின் அடையாளமாக வெண்புறாக்களை சமயத் தலைவர்கள் வானில் பறக்க விட்டனர். பின்னர் யாத்திரை ஆரம்பமானது.

சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த யாத்திரையில் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

சர்வமதத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தோர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள், பெண்கள், வயோதிபர்கள் என ஆயிரக்கணக்கானோர் நேற்றைய யாத்திரையில் கலந்துகொண்டனர். (12ஆம் பக்கம் பார்க்க)



சின்னமடு மாதா ஆலய முன்றிலில் இருந்து சமாதானத்துக்கான சர்வமதப் பாதயாத்திரை ஆரம்பமாவதற்கு முனனர் சர்வமதத் தலைவர்கள் சமாதான வெண்புறாக்களை வானில் பறக்கவிட்டனர். புறாக்களைக் கைகளில் ஏந்தியவாறு மதத் தலைவர்கள் அங்கு கூடி நின்ற காட்சி. (படம் : றோய் மதிவதனன்)

பாதயாத்திரைக் காட்சிகள் 2ஆம் பக்கத்தில்

## ரத்வத்தையின் புதல்வர்கள் நேற்று பொலீஸில் சரண்!

கொழும்பு,பெப்.24

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் புதல்வர்களான லொஹான் ரத்வத்தை, சானக ரத்வத்தை ஆகிய இருவரும் நேற்றுக் காலை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவில் சரணடைந்துள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலின்போது கண்டி மடவள உடத்தலவின்ன பிரதேசத்தில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக கடந்த மூன்று மாதங்களாக இருவரும் தேடப்பட்டு வந்தனர். இவர்களை கைது செய்யுமாறு கண்டி தெல்தெனிய நீதிவான் வீ. ராஜபக்ஷ கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் கண்டி பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். ஆனாலும் இவர்கள் இருவரும் தலைமறைவாகியிருந்தமையால் பொலீஸாரினால் கைது

(12ஆம் பக்கம் பார்க்க)

## உடன்படிக்கை குறித்து படையினருக்கு விளக்கமளிக்க பிரதமர் சுற்றுப்பயணம்

### அடுத்த மாத நடுப்பகுதியில் யாழ். வருவார்

கொழும்பு,பெப்.24

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நிரந்தர யுத்தநிறுத்தத்துக்கான உடன்பாடு தொடர்பாக வடக்கு - கிழக்கில் உள்ள படையினருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கமளித்து வருகின்றார். இதன் ஒரு கட்டமாக பிரதமர் அடுத்த மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்வார் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் வவுனியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது வவுனியா படைத்தளத்தில் படையினருக்கு விளக்கமளித்த பிரதமர், அதன் பின்னர் திருகோணமலைக்குச் சென்றார். அங்கு கடற்படைத் தளத்தில் படையினருக்கு விளக்கமளித்தார்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு சென்ற பிரதமர் அங்குள்ள படைத் தளத்தில் படையினரைத் தனியாகவும், பொலீஸாரைத் தனியாகவும் சந்தித்து புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக அவர்களுடன் உரையாடினார்.

முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பாகக் கொண்டுள்ள அதிருப்தி நிலை தமது முயற்சிகளைப் பாதிக்கும் என்று கருதியே பிரதமர் படையினருக்கு அந்த உடன்பாடு குறித்து விளக்கமளித்து வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

சமாதானத்தை நிலைநாட்ட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்து வரும் பிரதமர் படையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் நேரில் கேட்

(12ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்க்கட்சி தலைவரும் யாழ். வருவார்

யாழ்ப்பாணம்,பெப்.24

கடந்த கால இராணுவ நடவடிக்கையால் சீரழிந்துபோயுள்ள தென்மராட்சியை பார்வையிட எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

தென்மராட்சி அழிவுகளை நேரடியாகப் பார்வையிட வருமாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் விடுத்த அழைப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## அமைச்சர்கள் மூவர் யாழ். வருகின்றனர்

யாழ்ப்பாணம்,பெப்.24

கல்வி, விளையாட்டு, வனவள சுற்றாடல் ஆகிய துறைகளில் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக அத்துறை சார்ந்த அமைச்சர்கள் மூவா நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

உயர்கல்வி அமைச்சர் கபீர் ஹாசிம் யாழ். பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து குடாநாட்டு மாணவர்கள் உயர்கல்வியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வார்.

யாழ். பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக் கழகம், உயர்தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் தகவல்களைச் சேகரிப்பார்.

இளைஞர் விவகாரங்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்பாடு பற்றி ராஜதந்திரிகளுக்கு விளக்கம்

கொழும்பு,பெப்.24

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தாகியுள்ள புரிந்துணர்வு உடன்பாடு குறித்து கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் டிரோன பெர்னாண்டோ, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரே இந்த விளக்கத்தை அளித்தனர்.

நிரந்தர சமாதானத்துக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது என்றும் -

புரிந்துணர்வு உடன்பாடு முறைப்படி அமுல் செய்யப்பட்டு பேச்சுக்கான சூழ்நிலை உருவாக்கப்படவிருக்கின்றது என்றும் -

அமைச்சர்கள் எடுத்துக் கூறினர்.

சமாதான சூழல் ஏற்பட்டிருப்பதால் வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு பணிகளுக்கு மேலும் உதவிகளை வழங்குவதாக வெளி நாட்டு ராஜதந்திரிகள் உறுதி அளித்துள்ளனர். (ஐ-3)

### தென்னிலங்கைச் சிறைகளில் உள்ள

## வன்னிப் பகுதி கைதிகளை பெற்றோர் பார்வையிட வசதி

கொழும்பு,பெப்.24

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கைதிகளை அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளுக்குச் சென்று அவர்களது பெற்றோர்கள் பார்வையிட விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி உறவினர்களை அழைத்து வருவதற்காக இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இரு பஸ்கள் நாளை கண்டி வீதி ஊடாக நேரடியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் செல்லும்.

இரு மாவட்டங்களிலும் இருந்து முதற்கட்டமாக தலா 15கைதிகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 400 இலங்கை அகதிகள் இத்தாலிக் கரையில் மீட்பு!

லண்டன்,பெப்.24

நாநூறு இலங்கை அகதிகளை ஏற்றி வந்த படகு ஒன்றை இத்தாலியின் சிசிலி தீவுக்குச் சமீபமாக வைத்து இத்தாலிக் கரையோரப் பொலீஸார் நேற்றுக் காலை கைப்பற்றியுள்ளனர்.

ஐம்பது மீற்றர் நீளமான 'நிக் கோபல்' என்ற பெயரை உடைய இந்தப் படகு இயந்திரக் கோளாறு காரணமாக கட்டானியா துறைமுகத்துக்குச் சமீபமாக நங்கூரமிட்டிருந்த சமயமே கைப்பற்றப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

படகில் ஏறிய பொலீஸார் அதிலிருந்த நானூறு பேரையும் கைது செய்து கட்டானியா துறைமுகத்துக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு வைத்து அடையாளம் காணப்பட்ட அவர்கள் பின்னர் வரவேற்பு மண்டபம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்பட்ட இந்தப் படகு சுயஸ்கால்வாய் ஊடாக சிசிலிக்கு வந்துள்ளது என்று அதில் பயணம் செய்தவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர். (ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நேற்றைய பாதயாத்திரைக் காட்சிகள்




யாத்திரையில் முன்னே சென்ற மதத் தலைவர்கள்....



திரண்டு வந்து பங்கேற்ற பாடசாலை மாணவர்கள்....



பாதயாத்திரை பண்ணைப் பாலத்தைத் தாண்டி நகரினுள் நுழைகிறது....



யாத்திரை நேற்று மாலை நல்லூர்க் கந்தன் ஆலயத்தை வந்தடைந்தபோது....



நேற்றைய முதல்நாள் யாத்திரையின் முடிவில் நல்லூரில் நடந்த நிறைவுக் கூட்டத்தில் அங்கிலிக்கன் திருச்சபையின் குருமுதல்வர் அருட்திரு பி.நேசகுமார் உரையாற்றுகிறார்....



சமாதானப் பாதயாத்திரை ஆரம்பமாவதற்கு முன்னர் ஊர்காவற்றுறை சின்னமடு மாதா ஆலயத்தில் நடந்த கூட்டத்தில் பங்குபற்றிய மதத் தலைவர்கள்.....




சின்னமடு தேவாலயத்தில் இருந்து யாத்திரை புறப்பட்டபோது....
*(படங்கள்: பொ.இராஜேஸ்வரன், றோம் மதிவதனன்)*

## மெய்வன்மைப் போட்டிகள்

சுழிபுரம்,பெப்.24

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் நா.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினராக வலிகாம கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.சு. சுந்தரசிவமும் கலந்துகொள்வர்.

(க-7-28)

★ ★ ★

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ்.சோமேஸ்வரபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் நல்லூர் பிரதேச செயலர் நா.வேதநாயகன் பிரதமவிருந்தினராகவும், வேலணை கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சோ.தில்லைநாதன், வ.பி.போ. சபையின் கணக்காளர் சபா.தியாகராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (க-7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ் பிரதேச செயலர் பிரிவு 2ஆம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதான வீதியில் உள்ள மர்வேலைப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

2ஆம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களையும், போதனாசிரியர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-8)

# யாழ்.மக்களின் சமாதானக் குரல் தென்பகுதியில் எதிரொலிக்கட்டும்!

## சமாதான யாத்திரை குறித்து நல்லை ஆதீன முதல்வர்

யாழ்ப்பாணம்,பெப்.24

சமாதானத்துக்கான பாதயாத்திரைமூலம் யாழ்ப்பாண மக்கள் வெளிப்படுத்தியுள்ள சமாதானக் குரல் தென்பகுதியிலும் பேரொலியை எழுப்ப வேண்டும். இதன் மூலமே நாட்டின் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

நேற்று ஆரம்பமான பாதயாத்திரை நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் நிறைவுபெற்றபோது அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு சகல மக்களும் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழவேண்டும். சர்வமதத் தலைவர்களும் தமிழீழ மக்களும் ஒன்றுசேர்ந்து ஆரம்பித்த இந்தச் சமாதானப் பாதயாத்திரை நாட்டுக்கு நன்மையைப் பெற்றுத்தரவேண்டும் - என்று அவர் கூறினார்.

இலங்கைத் திருச்சபையின் யாழ். குருமுதல்வர் வண.எஸ்.பி.நேசகுமார் தனதுரையில் -

இன,மத மற்றும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மனித மனங்களின் ஆழமான சிந்தனையில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதயாத்திரை சமாதானம் விரைவில் ஏற்பட வழி வகுக்க வேண்டும் - என்று கேட்டுக் கொண்டார்.

சைவ அர்ச்சகர் சங்கத் தலைவர் சிவஸ்ரீ எஸ்.மகாலிங்கக் குருக்கள் தனதுரையில் -

சமாதானத்துக்கான கரு இப்போது உற்பத்தியாகி உள்ளது. அது ஜனனம் எடுத்து நிலைத்து வாழவேண்டும். அதற்கு இந்தப் பாதயாத்திரையின் மூலம் அனைவரும் எமது பங்களிப்பை வழங்குவோம். சமாதானத்தின் மூலம் நாட்டுக்கு விடிவு கிடைக்கட்டும் - என்றார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் இணைச் செயலாளர்களில் ஒருவரான வண.பிதா ஜே.பி.சு.செல்வராசா உரையாற்றுகையில் -

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்காக இறைவனுக்குப் பாதகாணிக்கை கொடுத்து யாத்திரை செய்கின்றோம். அதற்கு உரிய பலன் கிடைக்கும் - என்றார்.

இந்து குருமார் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.சந்திரசேகரசர்மா தனதுரையில் -

சகல மக்களும் ஒற்றுமையாக ஒரே குறிக்கோளுடன் ஆரம்பித்துள்ள இந்தப் பாதயாத்திரை எமக்கு நிம்மதியான வாழ்வைத் தரவேண்டும் - என்று தெரிவித்தார்.

(ஐ-10-8-9-180)

## தொலைந்துபோன அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் கண்டெடுக்கப்பட்ட நான்கு அடையாள அட்டைகள் வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றை உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பின்வருவோரின் அடையாள அட்டைகளே ஒப்படைக்கப்பட்டுள்ளன:-

☆ செல்லப்பா சின்னம்மா- (0903022590)

☆ பத்மநாதர் ரஞ்சினிதேவி-(0902023328)

☆ தமயந்திதேவி ஸ்ரீஸ்கந்தராசா-(0908012829)

☆ சுதந்திரராசா புஸ்பமாலா-(748433155v)

(ஒ-8)

# மதங்கள் இணையும் போது நிரந்தர சமாதானம் உருவாகும்!

## ஜெயசேகரம் அடிகள் உரை

யாழ்ப்பாணம்,பெப்.24

மதங்கள் ஒன்றுசேரும்போது தான் நாம் நிரந்தர அமைதியையும் சமாதானத்தையும் பெறமுடியும்.

நேற்று ஆரம்பமாகிய சர்வமதப் பாதயாத்திரையின் ஓர் அணி புனித யாகப்பர் ஆலயத்தில் இருந்தும் ஆரம்பமாகியது. அச்சமயம் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அருட்திரு. அ.பி.ஜெயசேகரம் அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களாகிய எமது ஆன்மீகம் சமாதானத்தின் ஓர் உந்துசக்தி. சமாதானத்தை ஏற்படுத்த ஆன்மீகம் இன்றியமையாதது.

சமாதானத்தை வேண்டிய எமது இன்றைய போராட்டம், தொடர் போராட்டங்களுக்கான ஒரு முதற்படி. பல வகையான போராட்டங்களைக் கண்டு சலித்துப்போன நாம் இன்றைய இப்பாதயாத்திரையின்மூலம் எம்மை பலப்படுத்திக் கொள்கின்றோம். சமாதானத்திற்கான எமது குரலை, தமிழ மக்களின் சமாதான வேட்கையை முழு உலகுக்கும் வெளிப்படுத்துகிறோம்.

எமது [illegible] இனம் அழிக்க முடியாத - பல்லாண்டு பழமை வாய்ந்த - இனம். தமிழை அழிக்க முயன்ற முடிகள், ஆட்சியாளர்கள் தோற்றுப் போய்விட்டனர். ஆனால் தமிழும், தமிழினமும் இன்று அழிக்க முடியாத பெருவிருட்சமாக வளர்ந்துள்ளன.

தமிழர் நாகரிகமும் பண்பாடும் எமது எதிர்கால சந்ததிக்கு ஒரு புதையல். இதை பேணிக்காக வேண்டியது எமது பொறுப்பு. இன்றைய கால கட்டத்தில் அச்சமின்மை, துணிவு எமக்குத் தேவையாகவுள்ளது. அச்சமின்மை, துணிவுமே நாம் எமது உரிமையைப் பெற வழிவகுக்கும். இன்று மக்கள் சக்தியின் மூலம் தான் சமாதானத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் இப்பாதயாத்திரையை மேற்கொள்கிறோம்.

இப்பாதயாத்திரையின் பயனாக எமது மண்ணுக்கு நிரந்தர சமாதானமும் அமைதியும் கிடைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியட்டும் - என்றார். (ஐ-8-10)

உதயன்

## வரலாற்றுத் திருப்பம்

போருக்கு முடிவு கட்டி நாட்டில் நிரந்தர அமைதிச் சூழலையும் இன சௌஜன்னியத்தையும் ஏற்படுத்துவதற்கான அடித்தளம் இடப்பட்டுவிட்டது.

ஸ்ரீலங்காவின் இரு தேசிய இனங்களினதும் தேசியத் தலைவர்கள் இதயசுத்தியோடு நேசக்கரம் எடுத்து, போரை நிரந்தரமாக நிறுத்துவதற்கான உடன்படிக்கையில் ஒப்பமிட்டுவிட்டனர்.

சுமார் இரு தசாப்த காலமாக நாட்டுக்கும் மக்களுக்கும் பேரழிவை ஏற்படுத்திய யுத்தம் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது.

இனி இந்த அடிக்களமான சமாதானச் சூழலில் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சு முயற்சிகள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

தத்தமது மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் சிங்கள இனத்தின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், தமிழ்மக்களின் தேசியத் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் ஒப்பமிட்டிருப்பது இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு மகத்தான திருப்பமாக அமைகின்றது.

இரு துருவங்களாக விளங்கிய இரு இனங்களின் தலைமைகளையும் இத்தகைய இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவர முயன்ற நோர்வே அரசின் அனுசரணைப்பணி விதந்து பாராட்டப்பட வேண்டியது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை பிரதான நாடுகள் உட்பட சர்வதேச சமூகம் வரவேற்றிருக்கிறது.

நாட்டில் சமாதானம் நிலைபெற பிரார்த்திக்கும் மதத் தலைவர்களும் இதனை முழுமனதோடு வரவேற்றிருக்கின்றார்கள். அரசியற்கட்சிகள் மற்றும் இனங்கள் சார்ந்த அமைப்புகள் அனைத்துமே இந்த உடன்படிக்கையை வரவேற்றிருக்கின்றன.

நாட்டின் தலைவியான ஜனாதிபதியிடமிருந்து மட்டும்தான் 'கவலையான' தொனியில் கருத்து வெளியாகி இருக்கிறது.

இறைமையுள்ள ஒரு நாட்டின் அரசமைப்பு விதிகளைப் புறந்தள்ளிவிட்டு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உடன்படிக்கையில் பிரதமர் தன்னிச்சையாக - ஜனாதிபதிக்குப் பூரண விளக்கம் தராமலேயே - ஒப்பமிட்டிருப்பது அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி குமாரதுங்க சார்பில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே இணக்கமான ஒரு நிலைமை இன்னமும் ஏற்படவில்லை; ஏற்படப்போவதில்லை என்பதை ஜனாதிபதியின் இந்தக் கருத்து மீண்டும் ஒருமுறை உணர்த்தியிருக்கிறது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே உள்ள இந்த ஒத்துவராத போக்கு தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான, நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதில் பிரதமர் ரணிலுக்குச் சவாலாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு சமாதானமுயற்சிகளின் ஆரம்பம் முதல் நிலவி வருகிறது.

இந்நிலையில் -

தற்போதைய சமாதான முயற்சிகளால் தீர்வு கிட்டுமா என்பதை விட தமிழர்களின் பரிசீலனைக்காகவாவது ஒரு தீர்வுத் திட்டத்தை சிங்களத் தலைமையால் முன் வைக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

தமிழ்மக்கள் ஏற்கக் கூடிய ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படும் போதுதான் தற்போதைய சமாதான முயற்சிகளின் முதலாவது வெற்றியாக அது அமையும். பிரதமர் ரணிலின் சமாதான முயற்சியின் வெற்றி இதிலேதான் தங்கியிருக்கிறது.

அத்தகைய ஒரு திட்டத்தை பிரதமர் ரணில் துணிந்து முன் வைப்பாரா?

அதன் மூலம் அவர் சரித்திரத்தில் இடம்பிடிப்பாரா? அல்லது தமிழ் மக்களுக்கு என்றைக்குமே ஒரு தீர்வைத் தரமுடியாத சிங்களத் தலைமைகளின் பலவீனத்துக்குள் அவரும் சிக்கிக் கொள்வாரா?

இவை எல்லாம் இனிமேல்தான் தெரியவரும்.

# இணுவிலில் அட்டகாசம் புரிந்த கோஷ்டியினரில் சிலர் சிக்கினர்!

யாழ்ப்பாணம்,பெப்.24

கடந்த 19ஆம் திகதி இரவு 8.15 மணியளவில் இணுவில் தியேட்டர் வீதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்து தம்மை புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் எனக்கூறிக்கொண்டு அட்டகாசம் புரிந்தவர்களில் சிலர் புளொட் அமைப்பினரிடம் சிக்கியுள்ளனர்.

சுமார் 15 பேரைக்கொண்ட இளைஞர் கோஷ்டி ஒன்று குறிப்பிட்ட வீட்டுக்குள் புகுந்து அப்பகுதியில் நின்றவர்களை வாள், கோடரி போன்றவற்றால் வெட்டியும் பொல்லுகள், சைக்கிள் செயின் என்பவற்றால் அடித்தும் அட்டகாசம் புரிந்தமை தெரிந்ததே.

அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கொடுத்த தகவலின் பேரில் அட்டகாசம் புரிந்த ஐவரைத் தாங்கள் தேடிப்பிடித்துவிட்டதாகப் புளொட் அமைப்பினர் தெரிவித்தனர். அவர்கள் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் சம்பவ இடத்துக்குக் கொண்டு வரப்பட்டனர்.

அங்கு ஊர் மக்கள் முன்னிலையில் அவர்கள் தாம் புளொட் உறுப்பினர்கள் அல்லர் என்பதைத் தெரிவித்தனர்.

போதையில் தாங்கள் புரிந்த அட்டகாசத்துக்காக அவர்கள் பாதிக்கப்பட்டோரிடம் மன்னிப்பும் கோரினர். அதனையடுத்து ஊர்மக்கள் அவர்களுக்கு நீராகாரம் வழங்கியதுடன் இனிமேல் அவ்வாறான சம்பவங்களில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தி அனுப்பினர்.

(ஐ-4)

# திருகோணமலையில் இன்று நடக்கும் சமாதானப் பேரணி

திருகோணமலை,பெப்.24

திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில இன்று ஞாயிற்றுக்கிழமை சமாதானத்தை வலியுறுத்தி எழுச்சிப்பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணியில் மாவட்டத்தின் மூவினங்களைச் சேர்ந்த பொதுமக்கள், மதகுருமார், மாணவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

காலை 8மணிக்கு சமாதானப் பேரணி மூன்று பகுதிகளாக ஆரம்பமாகும். ஒன்று 3ஆம் கட்டையிலிருந்து ஆரம்பித்து ஜமாலியா ஊடாக மடத்தடிச் சந்தியை நோக்கிச்செல்லும்.

2ஆவது பேரணி காந்திநகர் மைதானத்தில் இருந்து ஆரம்பித்து கண்டி வீதியினூடாகச் செல்லும்.

3ஆவது பேரணி சிவன் கோவிலடியிலிருந்து ஆரம்பமாகும்.

பேரணிகள் மடத்தடிச் சந்தியில் சங்கமித்து மத்திய வீதியினூடாகச் சென்று மணிக்கூட்டுச் சந்தியை அடைந்து டொக்யாட் வீதி வழியாக திறந்த முற்றவெளியை அடையும்.

இறுதியாக சகல மதத் தலைவர்களின் பிரார்த்தனைக் கூட்டத்துடன் எழுச்சிப் பேரணி நிறைவுபெறும்.

இச்சமாதானப் பேரணிக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இச்சமாதானப் பேரணிக்கு கல்வி உலகம் பூரண ஆதரவை நல்க வேண்டுமென சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

(ஐ)

# குடாநாட்டுக்கு தரைவழிப்பாதையை மீண்டும் திறப்பதற்கு உதவுங்கள்!

## ஜனாதிபதிக்கு பொதுநிலை ஆணைக்குழு கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்ப்பாணம் நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளமையால் பெருந்துன்பங்களையும், இடையூறுகளையும் அனுபவித்து வரும் மக்கள் அது மீண்டும் திறக்கப்பட்டால் பெரும் நன்மை அடைவார்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு யாழ்மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். - கண்டிவீதி நெடுஞ்சாலையை மீண்டும் திறப்பது குறித்து ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை அறிந்து ஆறுதல் அடைந்தோம். விரைவில் அது முன்னரைப் போல பொதுமக்கள் வசதியாகவும், விரைவாகவும் பாதுகாப்பாகவும் போக்குவரத்துச் செய்யும் வழியாக அமைய வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

தரைவழிப்பாதை ஒன்று இல்லாத காரணத்தினால் வெளியிடங்களுக்கான பயணத்தை உரியகாலத்தில் மேற்கொள்ள முடியாமை, வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற சொல்லொணாத் துயரங்களை கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எமது மக்கள் அனுபவித்து வருகிறார்கள்.

ஆகவே ஜனாதிபதியாகிய நீங்கள் மனிதாபிமான முறையில் யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையை மக்கள் போக்குவரத்துக்காகத் திறக்க விரைவில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் குடாநாட்டு மக்களின் துயர்களை நீக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது.

(க-10)

## இலவசமாக தென்னங்கன்று

தென்மராட்சி,பெப்.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுதத அனர்த்தங்களால் அழிந்துள்ள தென்னை மரங்களுக்கு ஈடுசெய்யும் முயற்சியாக மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு இலவசமாக நல்ல இனத் தென்னங்கன்றுகளை வழங்க யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தென்னங்கன்றுகள் தேவைப்படுவோர் தத்தமது பகுதி விசாய சம்மேளனத்தின் ஊடாக அல்லது விவசாய சம்மேளத்தின் சிபார்சுடன் வரணி, இடைக்குறிச்சி விவசாய சம்மேளனத தலைவர் சி.துரைராஜாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் அறிவித்திருக்கிறார்.

## உதயவாக்கு

எதனையும் ஒழுங்காகச் செய்து முடிக்கத் தெரியாதவர்களே, பிறரது செயல்களை சிறுமைப்படுத்திச் சுகம் காணுகின்றனர்.

## நாளை

மாசி 13
திங்கட்கிழமை
(25-02-2002)
திதி : திரியோதசி
முன்னிரவு 7.53 வரை.
நட்சத்திரம் : பூசம்
பிற்பகல் 4.00 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 12.30 - 2.00
ராகுகாலம் : 8.00 - 9.30
(பழைய நேரப்படி)

## நாட்டு நடப்பு

### காலின் கதை

நாலிளைஞர் ஒன்றாய்க் கூடி
நண்பகல் உண்ண வந்தார்
காலுண்டோ? என்று தம்பி
கணக்கரை எட்டிக் கேட்டான்
கால் என்றால் நண்டுக்காலென்று
காத்திருந்தேன் காலைக்காண
கால் ஒன்று கிளாசில் வர
'கபக்' எனக் குடித்தான் தம்பி
காலென்ன விலையென்று கேட்க
சீலென்றால் எண்பது என்றான்
பாலென்றால் எட்டு ரூபா என்றே
பகர்ந்தேன் நான் பகிடியாக
காலொன்றை உள்ளே விட்டால்
கல்வியும் பாதிக்கும் அன்றோ?

- விகடகவி.

# தீவக கல்வி வலயத்துக்கு 45 வீத நூல்கள் இன்னும் இல்லை

ஊர்காவற்றுறை,பெப்.24

தீவக கல்வி வலயத்திற்கு இவ்வாண்டுக்குத் தேவையான இலவச பாடநூல்களில் 45 சதவீதமானவை இன்னும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டுக்கு மொத்தம் 37 ஆயிரத்து 362 பாடநூல்கள் தேவை என குறிப்பிட்டுள்ள போதும் 20 ஆயிரத்து 708 நூல்களே கிடைக்கப் பெற்றுள்ளதாக தீவக கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்பொழுது தரம் நானகுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடநூல்களில் தமிழ் மொழியைத் தவிர ஏனைய பாடநூல்கள் தமது வலயத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அதனைத் தவிர தரம் ஏழுக்குத் தேவையான விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பாட நூல்கள், தரம் ஒன்பதுக்குத் தேவையான சமூகக் கல்வியும் வரலாறும் தரம் பத்துக்குத் தேவையான தமிழ்மொழி இலக்கியம், தேசபடக்கல்வி, தரம் ஐந்துக்குத் தேவையான ஆங்கிலப் பயிற்சிப் புத்தகங்கள் போன்ற பாட நூல்களும் அனுப்பிவைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(க-116)

# சமாதான விரும்பிகளின் குரல்களுக்கு நாம் அனைவரும் செவிசாய்ப்போம்

## தவக்காலச்சிந்தனை

## பன்னிரண்டாம் நாள்

"இவரே என் அன்பார்ந்த மகன். இவரிடம் நான் பூரிப்படைகின்றேன். இவருக்கு செவிசாயுங்கள்."

"ஆம் இன்றைய உலகில் பலதிக்கிலும் பல்வேறுபட்ட குரல்கள் ஒலித்துக்கொண்டு இருக்கின்றன. சமாதானத்திற்காக ஒரு குரல், நீதிக்காக ஒருகுரல், பொருளாதாரத்துக்காக ஒருகுரல். இது மட்டுமா சமாதானம எனும் போர்வையில் நாடகம் போடும் கோஷங்கள் ஒருபுறம். யுத்தத்தைத் தொடர் என்று ஒருகுரல். உலக நாடுகள் சமாதானத்திற்காக பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து வந்தபோதிலும, குரல் கொடுத்தபோதிலும் அவை ஆயுதப் பேய்களால் நசுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

இரு வேறுபட்ட நாடுகளிடையே, இனங்களுக்கு இடையே நடைபெறும் போரினால் கொள்ளை இலாபம் சம்பாதிப்பவர்கள் போர் தொடர்ந்து கொண்டே போகவேண்டும் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டு வெறும கோஷம்போடும் அதிகாரிகளின் குரல்கள் ஒருபுறம். போரினால் அகதிகளாய், அநாதைகளாய் ஆதரவற்றவர்களின் ஓலமிடும் உள்ளங்கள் எத்தனை? பெரும் வல்லரசுக்கு இடையே ஆயுத உற்பத்தி ஒருபுறம், உடன்படிக்கை ஒருபுறம். இவ்வாறு பல செய்திகள், பல குரல்கள். எம்காதுகளை அழுத்துகின்றன. ஆனால் எக்குரலுக்கு எமது காதுகள் திறக்கின்றன.

எது எப்படியாயினும் நாம் நம்வழிதான் செல்வோம். ஆண்டவரின் குரலுக்கு செவிசாயுங்கள் என்ற இறைவனின் வார்த்தைகள் எம் காதுகளைத் துளைக்கட்டும்.

துன்பப்படுகின்றவர்களைக் கண்டால் தூர ஓடி விடுகின்றோம். எத்தனை ஏழை எளியவர்கள் நம் மத்தியில் அன்றாடஜீவனோபாயத்திற்கு வழி இன்றி அல்லற்படும்போது அறுசுவை உணவுடன், அலங்காரமாய், ஆடம்பரமாய் பவனிவரும் பகட்டு மனிதர்கள் எத்தனை பேர்?

ஆனால் ஆண்டவன் உருமாறினான். அமலனாய், ஆயனாய், தச்சனாய், பரதேசியாய், பாவியாய், மண்ணவர்களுக்காய் தன்னுயிர் நீத்த நேசனாய் எத்தனை எத்தனை கோலங்கள்.

இயேசுவின் உருமாற்ற நிகழ்ச்சியின்போது ஆண்டவர் அவரை மகிமைப்படுத்துகின்றார். அது சத்தியத்தின் 'மகிமை உண்மையின் மகிமை. மானிடர்க்காய் அவர் வழிநின்று நாமும் இன்றைய சமுதாயத்தில் பல ஏழை எளிய நீதிமான்கள், சமாதான விரும்பிகளின் குரல்களுக்குச் செவிசாய்ப்போம்.

பூ.ஜெயவதனி


## சிறுவர் பற்றிச் சிந்திப்போம்!

*சிறார்களை துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாப்பதற்கும் அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கும் குடும்பமே முழுமுதல் ஆதாரம். ஒரு நல்ல குடும்பத்தின் அடித்தளத்தில்தான் ஆரோக்கியமான சிறார்கள் உருவாக்கின்றார்கள். அன்பு, கருணை, நேசம், பாசம், இரக்கம்.... இவற்றிற்கு மத்தியில் வளரும் பிள்ளைகளே நாளை நல்லவர்களாக உருவாகின்றார்கள். சிறார்களின் எதிர்கால குணாம்சங்களை உன்னதமான முறையில் உருவாக்க ஒவ்வொரு பெற்றோரும் அக்கறை கொள்வது அவசியமானதாகும்.*

*குடும்ப சீரின்மை, சண்டை, சச்சரவு, பிரிவு, துயரம், துன்புறுத்தல் .... இவற்றிற்குள் வளரும் பிள்ளைகளின் எதிர்காலம் அபாயம் மிக்கதாகும். இவர்களே நாளை சமூகச் சீர்கேடுகளில் ஈடுபடும் முரட்டுத்தனம் மிக்கவர்களாக உருவாகின்றனர்.*

*ஆகவே உங்கள் எதிர்காலச் சந்ததியை அன்பாக வளர்த்து சமுதாயத்தின் நற்பிரஜையாக உருவாக்கும் கடமை ஒவ்வொரு பெற்றோரையும், பெரியோரையுமே சாரும்.*



- ரீ.ரீ.மயூரன். (மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு)

*உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-*
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு, அறை எண் 30,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
T.P. 021- 2261 EXT 274

சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ.) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் வெளியீடு.

(சி207747)

# தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வரும் குடாநாட்டு மாணவரின் கல்வித்தரம்

குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரும் காலங்களில் மாணவரின் பெறுபேறுகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கவலைகளை வெளிக்காட்டப்படும் கல்விமான்களின் அறிக்கைகளும் வெளிவருவது சகஜமாகிவிட்டது. கடந்த வருடம் டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரப் போகும் இந்த நேரத்தில் எத்தனையோ புத்தி ஜீவி

## ஒப்பீடு செய்யும் அறிவு ஜீவிகள் நிலைமையை சீர்செய்வார்களா?

கள் பெறுபேறுகளைக் கணிப்பீடு செய்யத் தயாராகிக் கொண்டிருப்பார்கள். அவர்களில் ஒருவர்கூட இன்றுவரை மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சியடையக் காரணம் என்ன என்று ஆராய்வதாகத் தெரியவில்லை. அது தொடர்பாக அவர்கள் சிந்திப்பதும் இல்லை. மாணவர்களது பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடந்த 2 தசாப்தங்களாக நடைபெற்றுவரும் யுத்தம்தான் என்று எழுந்தமானத்தில் இலகுவாகக் கூறப்படுகிறது.

### காரணம் என்ன?

அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். அது மட்டுமே காரணம் என்று உறுதிப்படக் கூறிடமுடியாது. மாணவருக்குத் தேவையான எத்தனையோ அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படவில்லை. அவர்கள் உரியமுறையில் கல்வியைத் தொடரப்போதிய இடவசதிகள் இல்லை, கல்வி உபகரணங்கள் இல்லை, செய்முறைப் பயிற்சிகளுக்கு வசதி இல்லை, பாடநூல்கள்கூட இல்லாத நிலையில் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகமாக எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கமுடியும்?

வேண்டிய வசதிகளை குடாநாட்டு மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க இதயசுத்தியுடன் முன் வந்தவர்கள் எத்தனை பேர்? மாணவர்களை மதிப்பீடு செய்து கருத்துக் கூறுபவர்கள் காரணத்தைக் கண்டறிய முற்படாமல் இருப்பது ஏன்? கல்விச் சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளே இன்றைய யுத்தத்துக்குக் காரணம் என்பது அனுபவம் கூறும் பாடம்.

யுத்தத்தின் அவலங்களைச் சுமக்கும் எமது மண்ணை பொருளாதாரத் தடைகள் பொறிகலங்க வைக்கின்றன. இடம்பெயர்வுகளும் இழப்புகளுமே எமது நாளாந்த நிகழ்வுகளாகிவிட்டிருந்தன. இவற்றிற்கு மேலாக எமது மூலதனமான கல்வியும் திட்டமிட்டுச் சிதைக்கப்பட்டு வருகிறதோ என்ற சந்தேகம் இயல்பாக எழுகிறது.

மாணவர்களது தேவைகளை - அவர்களது எதிர்பார்ப்புகளை - எவராவது நிறைவேற்றியபின் கணிப்பீடுகளும், மதிப்பீடுகளும் செய்தால் அதனை வரவேற்பதில் தவறில்லை. பரீட்சைப் பெறுபேறுகளை மதிப்பீடு செய்ய முன்னர் மாணவரின் எதிர்பார்ப்புகளை மதிப்பீடு செய்வதே சிறப்பாக இருக்கும்.

இன்றைய நிலையில் இருந்து படிக்க தளபாடங்கள் இல்லை, எழுதிப்படிக்க கரும்பலகைகள் இல்லை, இலவச பாடநூல்கள், சீருடைகளும் சீராக வழங்கப்படுவதில்லை. சுற்றுலா என்றால் என்னவென்றே தெரியாது. போக்குவரத்து வசதிகள் இல்லை, குப்பிவிளக்குகளின் குருட்டு வெளிச்சத்தில் கிணற்றுத் தவளைகளாய்த் தவிக்கும் எமது பிள்ளைகளின் இன்றைய நிலை என்ன?

### பாடசாலைகளின் நிலைமை

போரின் எச்சங்களாகக் குவிந்து கிடக்கும் கற்குவியல்களும், சிதறுண்டு கிடக்கும் பாட நூல்களுமே இதில் ஒரு பாடசாலை இருந்துள்ளது என்பதன் தடயப் பொருள்களாக எமது பிரதேசத்தில் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன. எஞ்சியிருக்கும் கட்டடங்களும் இராணுவ முகாங்களாக அல்லது பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் எமது பகுதியில் மூன்றில் ஒரு பகுதி பாடசாலைகள் சொந்த இடங்களில் இயங்க முடியாது இருப்பது அதிர்ச்சியைத் தருகிறது.

இடம்பெயர்வுகளின்போது பாடசாலைகளும் இடம்பெயர்ந்தன. எம்மைப் போலவே கையில் அகப்பட்ட பொருள்களுடன் உயிரைக் காப்பாற்ற கல்வியும் இடம்பெயர்ந்தது தமிழ் மாணவர்களில் ஒரு பகுதியினர் தரையில் இருந்து படிக்கின்றார்கள். இவர்களுடன் குளிரூட்டிய அறைகளில் கணனிகளுடன் இருக்கும் மாணவர் சமூகத்தை ஒப்பிடுவது நியாயமா?

விஞ்ஞான செய்முறைப் பயிற்சிகளுக்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் பாடசாலைகளுக்கு எடுத்துவரப்படுவதில்லை. இதனால் செய்முறைப் பயிற்சியே எமது பிரதேச பாடசாலைகளில் நடைபெறுவதில்லை.

நவீன கல்விச் சீர்த்திருத்தத்தின் படி ஒரு மாணவனுக்கு 60 சத வீதமான கல்வி செய்முறைப் பயிற்சிகள் மூலமாகவே வழங்கப்பட வேண்டும் என்று கல்விசார் அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆனால் எமது மாணவர்களுக்கு 6 சதவீதமான செய்முறைப் பயிற்சிகூட வழங்கப்படுவதில்லை.

தேசிய மட்டத்தில் நடைபெறும் எந்தப் போட்டிகளிலும் எமது பிரதேச மாணவர்கள் பங்குகொள்வதற்குப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். விளையாட்டுத் துறைகளிலும் சரி, கல்விசார் துறைகளிலும்சரி போக்குவரத்துப் பிரச்சினையைக் காரணங்காட்டி குடாநாட்டைத் தனிமைப்படுத்துவது காலங்காலமாக நிகழ்கிறது.

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் கிடைப்பதில்லை. இதனால் தென்பகுதிக்கு மாற்றலாகிச் செல்ல அவசரப்படும் ஆசிரியர்கள் ஒரு புறம்; நாட்டு நிலைமைகளைக் காரணங்காட்டி திருகோணமலையில் அலுவலகங்களைத் திறந்து வைத்துக்கொண்டு குடாநாட்டு மாணவர்களது கல்வி நிலைமைகள் தொடர்பாகப் பக்ஸ் செய்திகள் அனுப்பும் அதிகாரிகள் மறுபுறம்.

இதைவிட இங்கு கடமையாற்றும் ஆசிரியர்களும், அதிகாரிகளும் தமது பிள்ளைகளைத் தென்பகுதிக்கு அனுப்பிவிட்டு தமக்கேன் வீண் கேள்விகள் என்று எண்ணி மாணவர்களது கஷ்டங்களை உரிய இடங்களுக்கு எடுத்துச்செல்லப் பின்னடிக்கின்றார்கள்.

இவை அனைத்தும் எமது மாணவர்களுக்குக் கிடைத்துள்ள சாபக் கேடுகளே. இது தொடர்பாக யாரும் கணிப்பீடு செய்யமாட்டார்களா?

### நூலகம் எங்கே?

1983 ஆம் ஆண்டு யாழ். பொது நூலகம் தீவைத்து எரிக்கப்பட்டது. அதன்பின்னர் குடாநாட்டில் நூலகம எங்கே இருக்கின்றது என்பது பெரும்பாலான மாணவருக்குத் தெரியாது. நூலகம் இருந்த கட்டடத்தைப் புனரமைப்புச் செய்வதற்காக வெளிவிவகார அமைச்சர் தலைமையில் ஓடும், செங்கற்களும் சேகரிக்கப்படுவதாக அறிக்கைகள் வெளிவந்தன.

அங்கு சேகரிக்கப்பட்ட ஓடுகளும், செங்கற்களும் எங்கே என்பது எவருக்கும் தெரியாது. அவற்றை விற்று அந்த பணத்தில் புத்தகங்கள் வாங்கி அனுப்புவார்கள் என்று இனி அறிக்கை வரலாம்; ஆச்சரியப்படுவதற்கில்லை.

கிராமப் பிரதேசங்களில் நூலகங்கள் இயங்குகின்றன. அதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் அங்கே எமது மாணவர்களுக்குத் தேவையான நூல்கள் இல்லை. கதைப் புத்தகங்களும், சஞ்சிகைகளுமே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அதுவும் ஒரு சில இடங்களில் மேசைகளில் பரவப்பட்டிருக்கும். முகப்பில் நூலகம் என்று பெயர் மட்டும் இருக்கும்.

பாடசாலைகள் சிலவற்றிலும் நூலகங்கள் இருக்கின்றன. அவற்றில் இலவச பாடநூல்கள் மட்டும் ஒவ்வொரு தரத்திற்கும் ஒன்று என்றவாறு அடுக்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த ஒரு சில நூல்களும் புராதன காட்சிப் பொருள்களாக ஆங்காங்கே இருக்கின்றன. நவீன நூல்கள் எவையாவது குடாநாட்டு நூலகங்களில் இருக்கின்றனவா? மாணவரது கல்வியுடன் தொடர்புடைய - நவீன விஞ்ஞானம் தொடர்பான - தொழில்நுட்ப அறிவு சம்பந்தமான நூல்கள் இருந்தால் அவற்றை வைத்தே இங்கே ஒரு கண்காட்சி நடத்தலாம். முன்பின் பார்த்தறியாத அந்த நூல்களைக் கண்காட்சியிலாவது மாணவர்கள் பார்ப்பார்கள்.

புத்தகக்கடைகளில் விற்கப்படும் புத்தகங்களுக்கும் ஆனைவிலை; குதிரைவிலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. கொழும்பில் 50 ரூபாவுக்கு விற்பனையாகும் நூல் குடாநாட்டில் புதிதாக எடுத்துவரப்படும் போது 150 ரூபாபடி விற்பனையாகும். காரணங்கேட்டால் கப்பல் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்றே



கல்வி கற்கும் வயதில்.....

பதில் வருகிறது.

இந்நிலையில் குடாநாட்டு மாணவர்களது பொது அறிவு எப்படி வளரும்? இதை எவராவது சிந்தித்தார்களா? பொது அறிவை தென்பகுதி மாணவர்கள் ஆரம்பத்தில் இருந்தே படிக்கின்றார்கள். குடாநாட்டில் மட்டும் உயர்தரவகுப்பிற்கு வந்த மாணவர்கள்கூட தனிப்பட்ட வகுப்புகளுக்கு சென்று படிக்கவேண்டிய நிலைமை.

மாணவர்களது வாசிப்பும் பழக்கமும், பொது அறிவும், ஞாபக சக்திகளும் வளர்வதற்குள் அவர்களது

**வதனன்**

பாதி உயிர்போகும் நிலையே உள்ளது.

### விளையாட்டல்ல...

சர்வதேச தரம் கொண்ட விளையாட்டு மைதானங்கள் தென்பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக விளையாட்டுத்துறை அமைச்சு அரசிடம் இருந்தும் உலக நாடுகளிடம் இருந்தும் பல கோடி ரூபா நிதியை பெற்றுச் செலவிடுகின்றது.

குடாநாட்டில் அத்தகைய தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம் ஒன்றுகூட இல்லை. ஆனாலும் எமது மாணவர்களும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுகின்றார்கள். தேசிய மட்டத்தில் வெற்றி பெறக் கூடிய வீரர்கள்கூட எமது பிரதேசத்தில் உருவாகிக்கொண்டுதான் இருககிறார்கள்.

இதனால்தானோ என்னவோ தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு எமது மாணவர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டும், பின்னர் சிறுபிள்ளை விளையாட்டாக போக்குவரத்துப் பிரச்சினையைக் காரணங்காட்டி புறக்கணித்து விடுகின்றனர்.

எமது மாணவர்கள் கற்குவியல்களுக்கும், மிதிவெடிகள் புதைக்கப்பட்ட உள்ளூர் மைதானங்களிலும் தான் பயிற்சி செய்கின்றார்கள். இதையும் உரியவர்கள் கவனத்தில் எடுத்து எமது பகுதி மாணவர்களுக்கும் சர்வதேச தரத்துடன்கூடிய ஒரு விளையாட்டு மைதானத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பார்களாக இருந்தால், அது எமது சந்ததி முற்பிறப்பில் செய்த புண்ணியம் என்றே கூறலாம்.

### குப்பி விளக்குகளுடன் ...

விஞ்ஞான உலகத்தின் விந்தைகளுடன் இருப்பவர்களுடன் நாம் மட்டும் ஆதிமனிதர்களாகப் போட்டி போடுகின்றோம். கணனிகளின் உதவியுடன் கல்லூரி செல்லாமல் கற்கின்ற அவர்களுடன் ஒழுங்கான கரும்பலகைகூட இன்றிக் கற்கும் எம் பிள்ளைகளும் போட்டி போடுகின்றார்கள்.

எந்தப் பரீட்சைகளிலும் நாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை தமிழ்மாணவர் உணர்த்தினாலும் முழுமையான நிறைவைக் காணவில்லை. வசதி - வாய்ப்புக்கள் - இங்கும் கிடைத்தால் தெருக்களில் எல்லாம் இருக்கின்ற முட்கம்பி வேலிகளும் பாடசாலைகளில் உள்ள முகாங்களும அகற்றப்பட்டால், எமது பிள்ளைகள் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தால், அதன்பிறகு ஒப்பீட்டு மதிப்பீடு செய்யுங்கள்; நாம் மறுக்கவில்லை. கணனிகள் எமக்கென்றும் கசப்பான விடயமல்ல. ஆனால் அதைக் கற்றிட வசதிகள் எமக்குத் தேவை.

### கல்விச் சுற்றுலா

இன்றையமாணவர் சமூகம் எத்தனை இடங்களை - எமது வரலாற்றுச் சின்னங்களை - பிரதேச வளங்களை - நேரடியாகப் போய்ப்பார்த்து ஆய்வு செய்து - கற்கவேண்டியவர்கள்; ஆயுத முனையில் கையைக் கட்டி நிற்கின்றார்கள். அந்த இடமெல்லாம் அதிதீவிர பாதுகாப்பு வலயங்களாம் -

கடற்கரைகளில் சிப்பி, சோகி பொறுக்கி கைவேலை செய்தவர்கள் இன்று கண்ணி வெடியும், மிதி வெடியும் வெடிப்பதால் செய்வதறியாது விழிக்கின்றார்கள்.

தெற்கேசெலவதற்கே இன்று நாடடையே சுற்றிவர வேண்டிய நிலைமை. அதற்கும் எத்தனை அனுமதிகள், அவற்றைப் பெற்று தென்பகுதிக்குச் சென்றால் திரும்பிவருவதற்கு உத்தரவாதம் இல்லை. போனவர்களில் பலபேர் காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டதை நாம் இன்றும் மறந்துவிடவில்லை.

இதனால் புத்தகப் பூச்சிகளாக நாம் மட்டும் வளர்க்கப்படுகின்றோம்.

பாதைத் தடையுடன், பாஸ்சிலும் தடைகள் இருப்பதால் போய்ப்பார்த்துப் படிப்பதற்கு - படிப்பிப்பதற்கு யாருமே தயாராக இல்லை.

இந்நிலையில் கல்விசார் சுற்றுப் பற்றி ரீ.வியில் பார்த்துவிட்டு கனவு காண்பதைத் தவிர வேறுவழி எமக்கில்லை.

### முகவரி என்ன?

குடாநாட்டு மாணவர்களின் உயர் கல்வி மட்டுப்படுத்தப்பட்ட வட்டத்துக்குள்ளேயே நின்றுவிடுகின்றது. தென்னிலங்கையிலோ ஒரு மாணவன் உயர்தரப் பரீட்சை எடுத்து, பின்னர் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் ஏற்ற வகையில் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களும், அரச நிறுவனங்களும், தனியார் கல்வி நிலையங்களும், போட்டி போட்டுக் கொண்டு வசதிகளை வழங்க முன்னிற்கின்றன.

அத்தகைய நிறுவனங்களின் முகவரிகூட எமது மாணவர்களுக்குத் தெரியாத ஒரு மூடப்பட்ட நாடாக எமது குடாநாடு இன்று மாறிவிட்டது. உயர்தரத்தில் சித்தியடைந்து, பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் மாணவர்களைத் தவிர ஏனையவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் இங்கே இல்லை. ஒரு சில இடங்களில் உயர் கல்வி வாய்ப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளபோதும், அதற்கும் எத்தனை மாணவர்களைத் தெரிவு செய்வது என்று சிந்திக்கின்ற நிலையில்தான் அதிகாரிகள் உள்ளனர்.

தொழில்சார் கல்வி வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ள குடாநாட்டு மாணவர்களுக்கு அந்தக் கல்வி வாய்ப்புகள்மூலம் தொழிலையும் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இதனால் தொழில்சார் கல்வியா என்று ஏளனமாகப் பார்க்கும் நிலையில் மாணவர் சமூகம் மாறிவிட்டது.

பட்டப்படிப்புகள் வழங்கும் நிறுவனங்களை விரல்விட்டு எண்ணலாம். அவைகூட சர்வதேச தரத்துடன் கூடிய பட்டங்களை வழங்கக்கூடிய தராதரத்தில் இல்லை. ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தின் பின்னணியில் இயங்கும் பட்டப்படிப்புகள் வழங்கும் நிறுவனங்கள்கூட லாபநோக்கோடு செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.

### அரசியல் தலையீடு

ஒரு பாடசாலைக்கு உதவி வழங்குவதாக இருந்தால்கூட அந்தப் பாடசாலை நிர்வாகம் உதவும் அரசியல் கட்சி எதுவாக இருந்தாலும் அது கூறும் எல்லாவற்றுக்கும் தலையாட்ட வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுத்தால் இடமாற்றல் கடிதங்கள்வரும், கொலைப் பயமுறுத்தலுக்குக்கூட முகங்கொடுக்க நேரிடலாம். இவற்றால்தான் இன்றைய எமது மாணவர் சமூகத்தின் கல்வி வாய்ப்புகள் தீர்மானிக்கப்படுகின்றன.

இவற்றிற்கு எல்லாம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால் கல்வி தொடர்பாக மதிப்பீடு செய்யும் உரிமையைப் புறக்கணிக்கத் தேவையில்லை.

நாட்டின் சமாதானத்தை வலியுறுத்தி, இருதரப்பினருக்கும் இடையில் தற்போது உருவாகிவரும் சுமுக நிலைமையைப் பயன்படுத்தி, இந்தக் காலத்திலாவது மாணவர் சமூகத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்; செய்வார்களா?

☆

## நாடக எழுத்துரு தொகுப்பு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசனின் 'நிதர்சனத்தின் புத்திரர்கள்' - நாடக எழுத்துருக்களின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராகவும், வித்துவான் க. சொக்கன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நூல் வெளியீட்டுரையை ஆசிரியர் ஆறு. திருமுருகன் வழங்குவார்.

கவிஞர் இ.முருகையன், எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார். (ஐ)

# புகையில்லாப் பயணம்

அவன் சொல்லிவிட நினைத்தான் முடியவில்லை. அந்த மனிதரைப் பார்க்க அடிவயிற்றில் பயம் பந்தாய் எழுந்து இதயத்தில் இடித்தது; இத




**✳ பிள்ளைகள் முன்னே புகைக்கின்ற பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள் மற்றும் "சினிமா" நாயகர்கள் புகைப்பழக்கம் உருவாகுவதற்கு காரணமாகிறார்கள்.**

யம் படபடத்தது.

புகையிரதம் தன்பாட்டுக்கு தாளத்தோடு போய்க்கொண்டிருந்தது. வெளியில் மழை. இறக்கிவிடப்பட்ட கண்ணாடியில் மழைத்துளிகள் பட்டுத் தெறித்தன. மனிதர் எதையும் சட்டை செய்யாதவராய் புகையும் வாயும், கையில் புகையும் சிகரெட்டுமாய் கண்களை மூடி ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார்.

புகையிரதங்கள் இப்போதெல்லாம் புகைப்பதில்லை. அந்த மனிதரின் கைச்சிகரெட்டிலிருந்து புகை மெல்ல கருண்டு எழுந்து இருவருக்குமிடையில் சுழன்றுகொண்டிருந்தது. இவனுடைய சுவாசத்தோடு சேர்ந்து அனுமதியின்றி உள்ளே புகுந்துகொண்டிருந்தது.

நாங்கள் வாய் திறந்தபடி திரிவதில்லை. வாய்க்கு ஒருவசதி. தேவையானபோது மூடிக்கொள்ளலாம். மூக்குக்கு அப்படியல்ல. திறந்த வாசல் அது. அனுமதியின்றி எதுவும் (ஆடு மாடுகளல்ல) நுழைந்துவிடலாம். காற்றோடு சேர்ந்து நுழைகின்ற சிறு துணிக்கைகள் மூக்கை உசுப்பினால் தும்மல்வரும். அதையுங் கடந்து தொண்டை வழி சுவாசப் பாதையில் இறங்கினால் இருமல் வரும். சென்றது உதை வாங்கி வெளியில் வேகமாய் வீசப்படும். இவைகளையும் கடந்து வருபவைகளுக்கு ஒட்டும்பாகு காத்திருக்கும். அது ஒட்டி இழுத்தபடியே மேலே நகர்ந்து வெளியில் தள்ளும். போதாக்குறைக்கு இரசாயனப் பதார்த்தங்களில் தோய்த்து ஒருவழி பண்ணிவிடும். கிருமிகளும் தூசுகளும் இப்படித்தான் மாட்டிக்கொள்கின்றன. அதனால்தான் மூக்கு துணிவோடு முன்னே நீட்டிக்கொள்கிறது.

ஆனால் மனிதர்கள் இயற்கையோடு இயந்து வாழ்ந்தகாலம்போய் இயந்திர யுகத்தில் புகுந்த பின்னர் காற்று ரொம்பவும் கெட்டுப்போய்விட்டது! இந்த பாதுகாப்பெல்லாம் போதாது நமக்கு!

வாழ்வுக்கு அத்தியாவசியமானவை காற்று, நீர், உணவு என்பன. இந்த அடிப்படை விடயங்களே நோய்க்கு காரணமாகவும் அமைகின்றன! உணவைப் பற்றியும் நீரைப் பற்றியும் ஓரளவு பிரக்ஞை இருக்கிறது. தொப்பிக்கட்டுக்கட்டி கிணறுகளில் நீரை வைத்திருக்கிறோம். கிணறுகளில் சிறுநீர் கழிப்பதில்லை. வாந்தியெடுப்பதில்லை. (அந்தளவுக்காவது).

ஆனால் வளி பற்றிய பிரக்ஞையை நாற்றமும் நறுமணமும்தான் தீர்மானிக்கிறது. ஏழை நாற்றத்தை பழகிக்கொள்கிறான். பணமுள்ளவன் நறுமணம் பூசிக்கொள்கிறான்.

இதோ இவர் புகை இழுக்கிறார். புகை விடுகிறார். புகையிரதப்பெட்டியின் சிறிய அறையில் அவன் சுவாசிக்கும் வளியும் அதுதான். அவன், அவர் புகையையும் சேர்த்து இழுக்கிறான். இது அவன் குடிக்கிற நீரில் அவர் வாந்தி எடுக்க கலக்கிக் குடிப்பது போலத்தான்!

அவனுக்கு வயிற்றைக் குமட்டியது. வாந்திவருமாப்போல இருந்தது. இப்படி ஒப்பிட்டுப் பார்த்தால் வந்த ஓங்காளம் அல்ல அது.

புகை இரத்தத்தில் கலக்கிறது. அது சிகரெட் புகை. எந்த அருட்டலுமில்லாமல் சுவாசப்பையில் இரத்தத்தில் கலந்து மூளையின் வாந்தி மையத்தை நெருடுவதால் வருவது.

புகையிரதம் தாளத்தோடு போய்க் கொண்டிருந்தது. "புகையிரதத்தில் புகை இரத்தத்தில் புகையிரதத்தில் புகை இரத்தத்தில்" அவனுக்குக் கோபம் வந்தது.

சிகரெட் புகையில் என்னதானிருக்கிறது?

புகையிலை ஒரு பணப் பயிர். அது மனிதர்களை அடைவதற்குப் பல வடிவங்களை எடுக்கிறது. அதில் இந்த புகை வடிவம் சிகரெட், பீடி, சுருட்டு என்பன. அவை புகைந்து எல்லோருக்கும் பொதுவான வளி மண்டலத்தில் புகையிலையிலுள்ள பதார்த்தங்களை புகை வடிவில் சேர்க்கின்றன. அந்தப் புகையில் சாவீட்டுக் கிரியைப் பதார்த்தங்கள்போல ஏறத்தாழ 500 வகையான பதார்த்தங்கள் இருக்கின்றன. உடலில் உச்சிமுதல் உள்ளங்கால்வரை தீங்கு ஏற்படுத்தக்கூடியவை அவை!

நிக்கொட்டின், புற்றுநோயை உருவாக்கிற ஒரு தொகைப் பதார்த்தங்கள் எரிந்துவருகிற காபனோரொட்சைட்டு என்பன அவற்றுள் அடங்கும்.

நிக்கொட்டின் புகை உலக நச்சுவட்டம் இயங்குவதற்கான அடிப்படைப் பதார்த்தம்.

உண்மையில் நிக்கொட்டின் நீண்ட சதி வலையின் பிரதான ஆயுதம் - ஒரு புதை சேறு.

இந்தச் சதிவலை - புகையிலை, சிகரெட் கம்பனிகளில் தொடங்குகிறது. புகையிலை தூள் வடிவத்தில் நிக்கொட்டினை அழகான சிகரெட்டுகளாக சுருட்டுகிறார்கள். கவர்ச்சிகரமான விளம்பரங்கள் சிகரெட்டுகளை விளம்பரப்படுத்துகின்றன.

வீட்டில் பூச்சிகள் போல உலகின் இன்னொரு மூலையில் அறியா மனிதர் அதை வாங்கிப் புகைக்கின்றனர். சந்தர்ப்ப சூழ்நிலைகள், அறியாமை - புகைத்தல் மீண்டும் மீண்டும் நிகழ்கிறது. நிக்கொட்டின் இரத்தத்தில் கலக்கிறது. அது உடலில் சுற்றியோடுகிறது. தலைமைச் செயலகம் மூளைக்கும் செல்லுகிறது. புகையில் திளைக்கத் திளைக்க அதனளவு இரத்தத்தில் தொடர்ந்து பேணப்படுகிறது. நிக்கொட்டின் அடிமைப்படுத்தும்இயல்பு கொண்டது. தலைமைச் செயலகத்தை மெல்ல மெல்ல அடிமைப்படுத்துகிறது. நிக்கொட்டின் கட்டுப்பாட்டுக்குள் நினைவுகள், ஏக்கங்களில் இன்னுமோர் ஏக்கம். புகைப்பவருக்குள் நமைச்சல். மீண்டும் புகைக்கவேண்டுமென்ற அவா. நிக்கொட்டின் இல்லாமல் நானில்லை என்கிறது மூளை. ஏக்கம் பிரமாண்டமாகி அவரை மூழ்கடித்துவிடும்.

உடல், மனசு பரபரக்கும். நிக்கொட்டின் குறிப்பிட்ட அளவு இரத்தத்தில் இருந்தேயாகவேண்டும். அவருக்கு இல்லாவிட்டால் பதற்றம், பதகளிப்பு மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, எரிச்சல்படும் தன்மை, இதயத்துடிப்பு குறைவடைதல் போன்ற தான ஒரு நிலைமை தோன்றும் அவருக்கு.

'ஐயோ வேண்டாம் வேண்டாம்' என்று உடலின் மற்ற உறுப்புகள் அலறுவது நிக்கொட்டின் மூளைக்குப் புரியாது.

அவர் புகையிலை கொம்பனி



யின் நிரந்தர வாடிக்கையாளர்.


நிக்கொட்டின் இரத்தத்தில் நிரந்தர உறுப்புரிமை பெற்றால் அது தனது கைவரிசையைக் காட்டத்தொடங்கும். ஆரம்பத்தில் வாந்தி போன்றவை ஏற்பட்டாலும் போகப்போக உடல் "அட்ஜஸ்ட்" பண்ணிக்கொண்டு விடும். நிக்கொட்டினின் தாக்கம் இரத்தக் குழாய்களில் ஏற்படுகிறது. இரத்தக் குழாய்கள் சேதமடைந்து உடல் உறுப்புகளுக்கான இரத்த வலைப்பின்னல் சேதமடைய மூளை, இதயம் முதல் பிறப்புறுப்பு கடந்து காலுக்கான இரத்த ஓட்டம் கூட தடைப்பட நேரிடும்.

புகைக்கப் புகைக்க புகை செல்லும் சுவாசப் பாதையின் முன்னணிக் காவலரண்கள் தகர்க்கப்படுகின்றன. புகைபடிந்த சுவாசக் குழாய்களில் முன் சொல்லப்பட்ட ஒட்டும்பாகு, அசையும்படல செயற்பாடுகளை ஓர் ஐந்தாம்படைபோல அகற்றிவிடுகிறது புகை. நோய்க்கிருமிகள், தூசுகள் என்பன சுவாசப்பையை சென்றடைய இப்போது தடைகள் இல்லை. சுவாசப்பை சாக்குப்பை போலாகிவிடுகிறது.

புகையில் உள்ள புற்றுநோயை உருவாக்குகிற பதார்த்தங்கள் ஆறஅமர சுவாசப்பையிலிருந்து புற்றுநோயை உருவாக்குகின்றன. இரத்தத்தில் கலந்து பரவுகின்றன. சுவாசப்புற்றுநோய் ஏற்பட்டவர்களில் 90 வீதமானவர்கள் புகைப்பழக்கம் உடையவர்கள்.

நோயுற்ற சுவாசப்பை செயற்றிறன் குறைந்த "லொக்" "லொக்" மனிதர்களை உருவாக்குகிறது. புகையின் தாக்கம் கருப்பையிலிருக்கும் சிசு வரைக்கும் செல்லக்கூடியது.

இப்படிப்பட்ட புகையை அவன் சுவாசிக்கிறான். புகைப்பவரை மாத்திரமல்ல புகைப்பவருக்கு அருகில் இருந்து அந்தப் புகையைச் சுவாசிப்பவரையும் புகை தாக்கும்.




இப்படி ஒருவர் புகைத்துக்கொண்டிருக்க அப்பிராணியாய் அருகிருந்து அவர் புகையைச் சுவாசிப்பதற்குத் தானாக நிகழும் இச்சை இன்றிய புகைத்தல் (Passive Smoking) என்று பெயர்.

சிகரெட் புகையில் இரண்டுவிதம் இருக்கிறது. ஒன்று உள்ளே இழுக்கப்படுகின்ற புகை, மற்றது சிகரெட் நுனி எரிந்து வெளிவருகிற புகை (கையில் சிகரெட்) சிகரெட் நுனி எரிந்து வருகிற புகையில் தீங்கு விளைவிக்கின்ற பொருள்கள் அதிகம். அருகில் இருப்பவர் இரண்டு புகையையும் உள்ளெடுக்கிறார்.

இப்படி உள்ளெடுக்கப்படுகிற புகை இரண்டு வகையும் இரு சாராருக்கும் தீங்குதான். ஒன்று பொம்மரடி மற்றது ஷெல்லடி அவ்வளவுதான்.

ஆக, நடுக்கூடத்து நாயகமாகத் தந்தை புகைக்க, புகை மூலையில் உட்காந்திருக்கும் பாட்டி (மூலையில் ஏன் பாட்டிகளை உட்கார வைக்கிறார்கள்?) தொட்டிலில் உள்ள குழந்தை, கருப்பையில் இருக்கும் சிசு வரைக்கும் புகை பரவும். இந்தப் புகையும், புகை சார்ந்த இடமும் ஒடுக்கமான மூடிய அறையானால் (மினி சினிமாக் கிடங்கு) சொல்ல வேண்டியதில்லை.

மூச்சுத்திணறுவதுபோல ஓர் உணர்வு. பொறுக்க முடியவில்லை. கோபம் உள்ளே, திகு திகு என எரிந்தது. அவரை உறுத்து விழித்துப் பார்த்தான். அவர் கண்களை மூடித் தான் அமர்ந்திருந்தார். அவனுடைய தவிப்பு அவருக்குத் தெரியவில்லை. கட்டுமஸ்தான ஆள். உருண்டு திரண்ட கையில் விரல்கள் பெரிதாக இருந்தன. அப்படியே மடக்கி முகத்தில் வீசினால் இவன் விழிகள் இரண்டும் வெளியில் விழுந்து விடலாம்.

சிகரெட் தீங்கு விளைவிக்கும் உண்மைதான். ஆனால் உடனடித் தீங்கு இப்படி.......

தைரியத்தை வரவழைத்துக் கொண்டான். எதற்கும் தயாராக வேண்டியதுதான். (பாய, ஓட, பதுங்க)

"அக்... அக்... அக்...". இருமல் சில வேளைகளில் மொழியாகிறது.

அவர் திடுக்கிட்டுக் கண் விழித்தார். சிவந்த விழிகள் இவனை ஏறிட்டன.

"என்ன?.." நிக்கொட்டின் படிந்து கறுத்தப் போயிருந்த உதடுகள் அசைந்தன.

இவனுக்குப் பேச்சு வரவில்லை. நாக்கு இழுத்துக்கொண்டோ, ஒட்டிக்கொண்டோ விட்டதுபோல இருந்தது.

"எ...... எ...... பு......"

மேலே இருந்த 'புகைத்தல் வி.....க்கப்பட்டுள்ளது' (யாரோ அழித்து விட்டார்கள்) என்ற அறிவிப்புப் பலகையைக் காட்டினான்.

சட்டென்று அவர் தாடை இறுகியது. கைவிரல்களை மடித்துக் கையை உயர்த்தினார். அவன் கத்தியிருப்பான். அவர் சிகரெட்டை நசுக்கி யன்னல் திறந்து வெளியே எறிந்தார். மழை விட்டிருந்தது. குளிர் காற்று உள்ளே வீசத்தொடங்கியது.

அவன் பெருமூச்சு விட்டான். அவர் தளர்ந்துபோய் அவனைப் பார்த்தார். புன்முறுவல் பூத்தார். அவர் வெளியில் முரடு; உள்ளே இனிப்பு. பலாப்பழம்.

புன்முறுவலோடு பலகையைப் பார்த்தார்.

"புகைத்தல் விலக்.. கக்.. கக்.. கக்.." உரத்துப் படிக்கத் தொடங்கியவர் முடிக்க முடியவில்லை. இருமத் தொடங்கினார். கண்களில் நீர் வடிய, உடல் குலுங்க இருமினார். அவன் ஜன்னலை இறுக்கி மூடினான். குளிர்காற்று நின்றுபோய் விட்டது.

**டாக்டர்**
**அ. கிருஷ்ணேந்திரன்**

இருமல் குறைந்து போக நெஞ்சைப் பிடித்துக்கொண்டார். சட்டைப் பையிலிருந்து ஒரு குளிகையை நாக்கின் கீழே வைத்துக்கொண்டார்.

நீண்ட நேரம் கழித்து அவர் தடுமாறியபடி பேசினார்.

"சொறி.. சொறிதம்பி" மீண்டும் மீண்டும் சொன்னார்.

"முன்பு நான் ஒரு குத்துச் சண்டை வீரன்" நிறுத்தினார். "முன்பு ஒருமுறை உம்மை மாதிரி சொன்ன ஒருத்தருக்கு புகையை முகத்தில் ஊதி குத்தியிருக்கிறேன்"

சட்டென்று இவனுடைய முள்ளெலும்புகள் குளிர்ந்து சுருங்குவது போல இருந்தது.

"இப்ப ஈயைக்கூட அடிக்க முடியாது இதயப் பலவீனம், இருமல், நெஞ்சுநோ" தடுமாறி நிறுத்தினார். "கொஞ்ச நேரம்கூட நடக்கமுடியவில்லை. இந்தப் பழக்கத்தை விடச் சொல்லி எப்பவோ சொல்லிவிட்டார்கள்."

பழக்கத்தை விட்டுவிடலாம். மனசைத் திட்டப்படுத்தி மருந்துகள்.... நான் அதைப்பற்றிப் படித்திருக்கிறேன்.

அவன் பேச்சைக் கவனத்தில் எடுக்கவில்லை.

"இப்ப நெஞ்சுவலி வேற" "நான் உங்களுக்கு உதவி செய்கிறேன்." இறங்கிற இடம்வந்திட்டுது தம்பி இனி ஒண்டும் செய்யேலாது."

அவன் விடவில்லை. "உங்கடை அட்ரஸ் சொல்லுங்கோ வாறன்"

கஸ்ரப்பட்டுச் சிரித்தார்.


"தம்பி.. என் வாழ்க்கைப் பயணத்திலும் இறங்கிற இடம் வந்திட்டுது. நீர் இப்ப எனக்கு இறங்க உதவி செய்தால் போதும்".

புகையிரதம் நிற்க அவர் அவன் உதவியோடு மெல்ல இறங்கிக் கொண்டார்.


புகையிரதம் மீண்டும் புறப்பட்டது. அவன் பயணம் புகையின்றித் தொடர்ந்தது.


உங்கள் வாழ்க்கைப் பயணமும் இனிதாய்ப் புகையின்றித் தொடரட்டுமே!

☆




**கனடிய சுகாதாரப் பிரிவு சிகரெட் பெட்டிகளில் அதன் தீங்கு பற்றிய பல தெளிவான அறிவுறுத்தல்களை வெளியிட்டிருக்கிறது. அவற்றுட்சில.... நம்மவருக்காக!**




✳ புகைத்தல் புற்றுநோய், பல் முரசு நோய்களை ஏற்படுத்துகிறது.

✳ புகைத்தல் ஆணுறுப்புக்கான இரத்த ஓட்டத்தை பாதிப்பதன் மூலம் ஆண்மைக் குறைவை (விறையாத்தன்மை) ஏற்படுத்தலாம்!

சிகரெட் புகை சயனைட் போமல்டிகைட் பென்சீன் போன்ற மிக நஞ்சுப் பதார்த்தங்களைக் கொண்டிருக்கிறது.

## யாழ். மாவட்ட மாட்டுவண்டில் சவாரிச் சங்கம்

### வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

நாள்: இன்று (24-02-2002) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2 மணி
இடம்: புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை விநாயகர் ஆலயம்

*முக்கிய குறிப்பு:* இதில் மாட்டுவண்டி உரிமையாளர், சாரதிகள் மற்றும் சவாரிப்பிரியர்கள் யாவரையும் பங்குபற்றும்படி வேண்டுகிறோம்.

*சவாரிச் சங்கம்,*
*புன்னாலைக் கட்டுவன்.* (897) - செயலாளர்.

---

## "உலக தமிழோசை"

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' கடல்கடந்தும் கன்னித்தமிழ் மறவா கனேடிய தமிழர்கள் மத்தியில் கலை, பண்பாடு தமிழ்மொழியுடன் பேணப்படுவது யாவரும் அறிந்ததே.

"விளம்பரம்" என்ற பெயரில் கடந்த பன்னிரண்டு வருடகாலமாக மாதமிருமுறை இலவசமாக வெளிவரும் பத்திரிகை என்பதை வெளிப்படுத்துவதில் பெருமை அடைகின்றோம்.

எழுத்தாளர்களின் ஊக்கம், வாசகர்களின் பாராட்டு, வர்த்தகர்களின் ஆதரவு பத்திரிகை வெளிவர ஆதரவு நல்கின்றன. அத்துடன் எம்மை இன்னமும் உலகத் தமிழோசை "சஞ்சிகையை" உலகளாவிய ரீதியில் வெளியிட கால்கோள் இட்டுள்ளது. சர்வதேசரீதியில் பல எழுத்தாளர்கள் ஆக்கமும் ஊக்கமும் தருகின்றனர். இதேவேளையில் மேலும் பல ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களையும் எதிர்பார்க்கின்றோம். இந்த ஆக்கங்கள் பலதரப்பட்டவர்களுக்கும் ஏற்றவையாக இருப்பது விரும்பத்தக்கது.

*யாழ். தொடர்புகளுக்கு:-*

இ.செல்வநாதன் (நகுலன்)
நியூ லக்சுமி ரேட்ஸ்,
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி.
T.P.:- 2928

**VLAMBARAM PUBLICATIONS,**
P.O.Box 37527,
*31, Tapscott Road,*
*SCARBOROUGH, ONTARIO MIB 5P9, CANADA.* (982)

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து
24.02.2002




செல்வன்

### மதனபாலன் மதுஜன்

அச்சுவேலியைச் சேர்ந்த மதனபாலன் மானிப்பாய் வீதி உடுவிலைச் சேர்ந்த சுபாஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் மதுஜன் 15.02.2001 இல் பிறந்து தனது முதலாவது பிறந்ததினத்தை 24.02.2002 ஞாயிற்றுக்கிழமை (இன்று) சுவிஸ்லாந்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் மதுஜனை (சுவிஸ்) அம்மா, அப்பா, அப்பம்மா (அச்சுவேலி), அம்மப்பா, அம்மம்மா, சுபோசித்தி, சுகிச்சித்தி (மானிப்பாய் வீதி, உடுவில்), சாந்தினி அத்தை, மாமா, கரிஷ், நிரோஸ் மச்சான் (ஜேர்மனி), கலைமகள் அத்தை, மாமா, தர்சிகா மச்சாள் (அச்சுவேலி), திருமகள் அத்தை மாமா (சுவிஸ்), பெரியம்மா, பெரியப்பா, பானு அக்கா (ஜெனீவா, சுவிஸ்), சின்ன அம்மப்பா, அம்மம்மா, கோகிலன், ஜனா (சண்கோ, வவுனியா) மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் உடுவில் சிவஞானப் பிள்ளையார் திருவருளினால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர்.

*மண்டபம்:-*
*PAROISSE DEVERNIER,*
*3, CHEMIN DE SALES,*
*1214 VERNIER, SWITZERLAND.*
*T.P 022 - 7823765 - 078882 2897.*

ஐ. தியாகராசா,
சித்திரகலா ஸ்ருடியோ
*(அம்மப்பா)*
(817) உடுவில், சுன்னாகம்.

---

## உபநயன பிரம்மோபதேச அழைப்பு

### (பூனூல் தரித்தல்)

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விஷூ வருஷம் மாசித் திங்கள் 13ஆம் நாள் நாளை (25.02.2002) திங்கட்கிழமை பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய நன்னாளில் காலை 6.27 மணிமுதல் 7.29 மணிவரை உள்ள சுபமுகூர்த்தவேளையில்,

கைதடி வடக்கு கயிற்றசிட்டி
தேவஸ்தான பிரதமகுரு
மூத்துகுமாரசாமி ஐயர் - வள்ளியம்மா
ஆகியோரின் பௌத்திரனும்

உசன் கந்தசுவாமி கோயில் பிரதமகுரு
இரத்தினசாமி ஐயர் - சங்கரி அம்மா
ஆகியோரின் பௌத்திரனும்

எமது கனிஷ்ட புத்திரனுமாகிய
**ஆதவ சர்மாவுக்கு**

பிரம்மோபதேசம் செய்து உபநயனம் செய்விக்க எல்லாம்வல்ல கற்பக விநாயகப் பெருமானதும் கயிற்றசிட்டி முருகப் பெருமானதும் திருவருளும் பெரியோர்களின் நல்லாசியும் கூடி இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தவர் சகிதம் வருகை தந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முகூர்த்தம் நிகழும் இடம்: கற்பக வீநாயகர் ஆலய மண்டபம்
தீக்ஷா குரு: வைதீக சாகரம் பிரம்மஸ்ரீ கதிர் செல்லப்பாக்குருக்கள் (மாதகல்)

*(இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)*

கற்பக விநாயகர் தேவஸ்தானம்,
*உரும்பிராய்.* (926)

தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ க.மு.ஐயாத்துரைக்குருக்கள்
தம்பதிகளும், சகோதரர்களும்.

---

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY

## இரண்டாவது பிறந்ததின வாழ்த்து




HAPPY BIRTHDAY

## செல்வன் விஜயவர்மன் லருசன் (LARUSAN)

*கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த விஜயவர்மன் - ரேணுகா தம்பதிகளின்*
*செல்வப் புதல்வன் லருசன்*
*தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (24-02-2002) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார்.*
*இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார்; அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார்,*
*எக்ஸ்போ நிறுவன ஊழியர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் லருசனை சந்திரசேகரப்பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.*

EXPO VIDEO COMPLEX
***No.7, K.K.S. Road, Kondavil.***
***T.P.No:021-3100***

திரு.திருமதி விஜயவர்மன்
(அப்பா - அம்மா) (1045)

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY

# ஜனநாயகம் பற்றிப் பேசுவதற்கு ஈ.பி.டி.பிக்கு யோக்கியதை இல்லை

## சிவாஜிலிங்கம் எம்.பி. சபையில் பேச்சு

கொழும்பு,பெப்.24

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகச்சென்ற நிராயுதபாணிகளைக் கொலைசெய்தும், கொடுமைப்படுத்தியும், சித்திரவதை செய்தவர்கள் ஈபிடிபியினர். இவர்கள் இன்று வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலைப் பிற்போடக்கூடாது எனக் கோரிக்கை விடுவது வேடிக்கையாக இருக்கின்றது. ஜனநாயகம் பற்றிப் பேசும் யோக்கியதை இவர்களுக்கு இல்லை.

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. சிவாஜிலிங்கம் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சிச் சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்திலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

"இன்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) ஆகிய ஆயுதக்குழுக்கள் முன்னைய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஆயுதங்களுடன் நடமாடுகின்றன.

**நெடுந்தீவில் தனி இராச்சியம்**

ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில் தனி இராச்சியம் நடத்துகின்றனர். அங்கே அரச அதிபரும் இல்லை, இராணுவமும் இல்லை. நெடுந்தீவில் எப்படித் தேர்தல் நடத்தமுடியும்?

தென்மராட்சியில் இடிபாடுகள் மட்டுமே காணப்படுகின்றன. மக்களே இல்லை. அங்கே யாரை வைத்துத் தேர்தல் நடத்தப்போகிறீர்கள்?

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய அரச அதிபர் அலுவலகங்களுக்குப்போய் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்யமுடியுமா?

எனவே, இப்படி அமைதியற்ற கால சூழ்நிலையில் எப்படி உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலைச் சுதந்திரமாக நடத்தமுடியும்? இதன் அடிப்படையிலேயே தமிழர் தேசிய கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலைப் பிற்போடும்படி கேட்டுக்கொண்டது.

அதன் அடிப்படையிலேயே இப்புதிய சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை, எதிர்க்கட்சியினர் உண்மைநிலை தெரியாமல் குட்டையைக் குழப்புகின்றனர், எனவும் சிவாஜிலிங்கம் எம்.பி. குறிப்பிட்டார். (க-ரி)

# பெற்றோல், டீசல் உடனடியாக விலை குறைப்பு

கொழும்பு,பெப்.24

பெற்றோல் லீற்றர் ஒரு ரூபாவாலும், டீசல் லீற்றர் ஐம்பது சதத்தாலும் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. உடனடியாக அமுலுக்கு வரும் இவ்விலை குறைப்பு ஒரு மாத காலத்திற்கு அமுலில் இருக்கும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தஹம் விமலசேன தெரிவித்தார்.

இதன்படி பெற்றோல் லீற்றர் 49 ரூபாவாகவும், டீசல் லீற்றர் 26 ரூபா வாகவும் இருக்கும். (ஜ-9)

# புரிந்துணர்வு உடன்படிக்கை; தமிழ்க் கட்சிகளும் வரவேற்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உருவாகியுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை தமிழ்க் கட்சிகளும் வரவேற்றுள்ளன.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தநிறுத்தத்தோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. சிறுபான்மைத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு முழுமையடைகின்றவரையிலும் சமாதான முயற்சிகள் நீடிக்கவேண்டும்.

அரசியல் லாபம்தேட நினைக்கும் சிலரின் விஷமத்தனமான நச்சுப் பிரசாரங்களினால் இந்த முயற்சியிலிருந்து அரசு பின்வாங்கிவிடக்கூடாது என்பதே சகல மக்களினதும் ஏக்கமாக இருக்கும்.

- இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**முஸ்லிம் காங்கிரஸ்**

'அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குமிடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்கின்றது என்று அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இதற்கு முன்னர் செய்யப்பட்ட யுத்தநிறுத்தங்கள் உடன்படிக்கை ஒன்றின்மூலம் செய்யப்படவில்லை. கண்காணிப்புக் குழுக்களின் பிரசன்னமும் இருக்கவில்லை. ஆனால், இப்போது முக்கியமான இவ்விரண்டு அம்சங்களும் இருப்பது நம்பிக்கையும் தெம்பும் தருவதாகும்.

மிக அவசரமாகக் கண்காணிப்புக் குழுக்கள் நிறுவுமாறு வேண்டிக்கொள்கின்றேன் - என்று தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) செயலாளர் நாயகமான சுரேஷ் பிரேமச்சந்திரனும் உடன்பாட்டை வரவேற்றுள்ளார்.

தமிழ்மக்களின் வரலாற்றில் முதல் தடவையாக யுத்தநிறுத்தம் தொடர்பாக ஏற்பட்டுள்ள உடன்பாடு இனப்பிரச்சினைத் தீர்வை நோக்கியதாக அமையவேண்டும் என்பதே சகலரது எதிர்பார்ப்புமாகும் - என்று அவர் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள உடன்பாடு நிரந்தர சமாதானத்தை நோக்கியதாக அமைந்தால் அது வரவேற்கப்படலாம். அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) தலைவர் வரதராஜப் பெருமாள் கருத்து வெளியிட்டுள்ளார். (ஐ-3-4)

# மேயர் கூறும் விளக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.24

"யாழ்.மாநகர அபிவிருத்திக்குத் திட்டங்கள் தயார். ஆனால் அதிகாரிகள் ஒத்துழைக்க மறுக்கிறார்களே - மாநகர சபை உறுப்பினர்கள் கூட்டாகக் குற்றச்சாட்டு" என்ற தலைப்பில் 20.02.2002ஆம் திகதிய உதயனின் 7ஆம் பக்கத்தில் வெளியான செய்தி குறித்து மாநகர மேயர் செல்லன் கந்தையன் விளக்கக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த விளக்கக் குறிப்பு வருமாறு:-

கடந்த 15.02.2002 அன்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற இந்து கலாசார அமைச்சின் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டுவிட்டு எனது அலுவலகத்துக்குத் திரும்பினேன்.

அவ்வேளை எனது அலுவலகத்துக்கு அருகில் உள்ள மன்ற உறுப்பினர்களுக்கான கூடத்தில் சிலர் உரையாடும் சத்தம் கேட்டது. நான் அங்கு நடப்பதை அவதானிக்கச் சென்றேன். அந்தச் சமயம் அந்தக் கூடத்தில் மாநகரசபை உறுப்பினர்கள் சிலரும் செய்தியாளர்கள் சிலரும் உரையாடிக் கொண்டிருந்தனர்.

நான் அங்கு செல்வதற்கு முன்னர் மாநகரசபை உறுப்பினர்கள் செய்தியாளர்களுக்கு எத்தகைய அறிக்கைகளைக் கொடுத்தார்கள் என்பது எனக்குத்தெரியாது.

கடந்த அரசின் காலத்தில் யாழ். மாநகரசபைக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதனால் ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், பதவியுயர்வு வழங்குதல், பதவி நிரந்தரமாக்கல் போன்றவற்றை உடனடியாக எம்மால் மேற்கொள்ளமுடியவில்லை. இது குறித்துப் பல தடவைகள் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

எனவே இதனைச் சாதகமாக்கிக் கொண்ட சில மாநகரசபை உறுப்பினர்கள் எமது தலைமையில் இயங்கிவரும் மாநகரசபையின் நிர்வாகத்தைச் சீர்குலைப்பதில் கடந்த சில வருடங்களாகத் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர். ஆனால் அவை எதுவும் இதுவரை வெற்றியளிக்கவில்லை.

இதனாலேயே இவர்கள் மாநகர அதிகாரிகளுக்கு எதிராக அபாண்டமான குற்றச்சாட்டுக்களை ஊடகங்களில் வெளியிட்டு மாநகர முதல்வருக்கும், நிர்வாகத்துக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தி நிர்வாகத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றார்கள்.

தற்போதைய மாநகர ஆணையாளரும், உத்தியோகத்தர்களும் மாநகரசபையின் வளர்ச்சிக்காக மிகுந்த கடமையுணர்வுடன் செயலாற்றி வருகின்றனர் என்பதை அறியத்தருகின்றேன் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)

# வட்டுக்கோட்டையில் புதனன்று சைவ சமயப் பெருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.24

வட்டுக்கோட்டை ஆகாயக்குளம் விநாயகர் ஆலய இந்துமா மன்றம் நடத்தும் சைவ சமயப் பெருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிமுதல் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு கோபூசை, தொடர்ந்து 8.30 மணியளவில் அகத்தியர் தோத்திரத்திரட்டு முற்றோதல் இடம்பெறும். பிற்பகல் 2 மணிமுதல் இந்துமா மன்றத்தின் போசகர் சு.செந்தில்நாதன் தலைமையில் மாலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ தி.சர்வேஸ்வரசர்மா ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்கள் வழங்கல், வாழ்த்துரை, சிறப்புரை, துதிப்பாடல் என்பனவும் தொடர்ந்து இடம்பெறும். (க-7)

# இனப்பிரச்சினைக்கு முடிவுகட்ட அரசமைப்பின் கீழ் வழி உண்டா?

**அ.இராஜரட்ணம்**
**(எல்.எல்.பி.)**
**சட்டத்தரணி**

இலங்கையில் நீடித்துவரும் இனப்பிரச்சினை நாட்டின் பொருளாதாரச் சீரழிகளுக்கும், இனங்களுக்கிடையே குரோத மனப்பான்மையை வளர்ப்பதற்கும், மனிதகுல அழிவுகளுக்கும் காரணமாக அமைநதுள்ளதை உலகமே அறியும். இத்தகைய அனர்த்தங்களில் இருந்து விடுபடுவதற்கு இனப்பிரச்சினைக்கு உடனடியானதும், நிரந்தரமானதுமான தீர்வு காணப்படவேண்டியது மிக இன்றியமையாத ஒன்றாகும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்ற மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவு தேவையாக இருக்குமெனவும், ஐக்கிய தேசிய முன்னணிக்கு அந்தப் பெரும்பான்மை இல்லாமையால் ஆளும் கட்சியால் இனப்பிரச்சினை தீர்க்க வாய்ப்பில்லையெனவும் பலர் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளனர். பொதுமக்கள் மத்தியிலும் இதேபோன்ற கருத்து நிலவத்தான் செய்கிறது. இக்கருத்து முற்றிலுமாக நிராகரிக்கமுடியாது என்றாலும் முழுப்படியாக இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

சட்டங்களை ஆக்குவது நாடாளுமன்றமாகும், சட்டத்துக்கமைய நிர்வாகத்தைக்கொண்டு நடத்துவது நிர்வாகத்துறையாகும். நிர்வாகத்துறையில் தலைவர் ஜனாதிபதியாவார். சட்டத்துறையும் நிர்வாகத்துறையும் முரண்பாடு இல்லாமல் செயற்படக் கருத்தொருமைப்பாடு தேவை. ஆனால் தற்பொழுது இலங்கை அரசியலில் சட்டவாக்கல் சபையான நாடாளுமன்றில் ஐக்கிய தேசிய முன்னணி பெரும்பான்மைப்பலத்துடனும், நிர்வாகத்துறைத் தலைமை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஜனாதிபதியின் பலத்துடனும் காணப்படுவதால் இவ்விரு வேறுபட்ட துருவங்களுக்குமிடையே கருத்தொருமைப்பாடு நிலவுமா என்பது கேள்விக்குறியாகும். இலங்கையின் அரசமைப்பானது சட்டத்துறையும், நிர்வாகத்துறையும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள் ஆட்சியில் இருந்து ஆட்சியை நடத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளதாலேயே இன்று பல பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதை யாபேரும் அறிவர். ஆனால் பிணக்குகள் உருவாகுவதற்கு எந்த அரசமைப்பு வித்திட்டதோ அதே அரசமைப்பே பிணக்கைத்தீர்க்கும் வழிமுறைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை அரசமைப்பின் ஏற்பாடுகளை அலசி ஆராய்ந்தால் புலப்படும்.

இனப்பிரச்சினை விடயத்தில் தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசமைப்பின் ஊடாக அரசு கடினமான வழிமுறையின்கீழ் அல்லது சுலபமான வழிமுறையின்கீழ் தீர்வு காண இடமுண்டு அதாவது வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணத்தில் நிறைவான சுதந்திரம் கொண்ட சமஸ்தி அரசொன்றை தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமான விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேசி வழங்குவதற்கான ஒரு சட்டமூலத்தை நாடாளுமன்றுக்குச் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்கின்மூலம் நிறைவேற்றினால் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் என்பதுதான் ஒரே மார்க்கமெனக் கொள்ளமுடியாது. இந்த வழிமுறை மிகக் கடினமான வழிமுறையாகவே ஆளும் கட்சிக்கு அமையும் எனலாம். ஆளும் கட்சியாகிய ஐக்கிய தேசிய முன்னணி தனித்தோ அல்லது அதன் கூட்டுக் கட்சிகளுடன் இணைந்தோ மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறமுடியாது. சமஸ்டி ஆட்சி வழங்கும் விடயம், அரசமைப்பு விதிகளைத் திருத்துதல், சேர்த்தல் போன்ற விடயங்கள் மூலமே ஏற்படமுடியும். எனவே அரசமைப்பு மாற்றத்தைப் புரிந்து சமஸ்டி ஆட்சியை வழங்கத் தேவைப்படும் மூன்றில் இரண்டு பங்கு வாக்கினைப்பெற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஒத்துழைப்புத் தேவை. இது சாத்தியமான ஒன்றல்ல.

இனவாத, மதவாத அமைப்புகளின் குறுகிய இலாபம் கொண்ட தவறான பிரசாரங்கள் நிகழலாம் என்று எதிர்பார்த்தவண்ணம் இருக்கும் நிலையில் தன்னைத்தான் ஒரு காலத்தில் ஆண்ட தமிழன் தன்னகத்தே கொண்டிருந்த உரிமைகளில் சிறுதுளியேனும் ஐக்கிய தேசியக் கட்சியோ அன்றி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியோ வழங்க முன்வந்தால் அதுவே அக்கட்சிகளின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிவிடக் காரணமாக அமைந்துவிடும் என அஞ்சும் நிலையில் இந்த இரு கட்சிகளுமே அரசமைப்பு வழியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பிணக்கைத் தீர்க்கவிரும்பமாட்டாதென்றே கருதமுடியும்.

இந்நிலையில் இனப்பிரச்சினையை மக்கள்மூலம் தீர்க்கவும், கட்சிகள் மீது இனவாதிகள், மதவாதிகள் பழி சுமத்தும் பிரசாரங்கள் எடுபடாமல் தவிர்ப்பதற்கும் ஏற்ற இலகுவான நடைமுறை வழி ஒன்று அரசமைப்பில் உண்டு.

இதுவே பிணக்கைத் தீர்க்கக்கூடிய மிக இலகுவான வழிகளாகும்.

அரசமைப்பின் XIII அத்தியாயம் உறுப்புரைப் 85(1)இன்படி ஏதாவது சட்டமூலம், பிரேரணைகளை மக்கள் தீர்ப்புக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என அமைச்சர்கள் எண்ணியுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளவிடத்து அத்தகைய சட்டமூலத்தை, பிரேரணைகளை ஜனாதிபதி மக்கள் தீர்ப்புக்கென மக்கள்முன் வைக்கவேண்டும். இந்த அடிப்படையில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கத் தேவைப்படும் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த முறையினைக் கைக்கொள்ளலாம்.

உறுப்புரை 86இன்படி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சட்டமூலத்தை, பிரேரணைகளை மக்கள் தீர்ப்புக்காக ஜனாதிபதி மக்கள்முன் சமர்ப்பிக்கலாம். தற்பொழுது உள்நாட்டில் இனப்பிரச்சினை காரணமாக நடைபெறும் யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம், மனிதகுலம் அழிவுப்பாதையில் போய்க்கொண்டிருப்பதால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டியது தேசிய முக்கியத்துவமான விடயமாகையால் இதற்குத் தேவையான சட்டமூலத்தை மக்கள் தீர்ப்புமூலம் நிறைவேற்ற மக்கள் தீர்ப்புக்கு சட்டமூலத்தை, பிரேரணைகளை முன்வைக்கமுடியும்.

உறுப்புரை 85(1), 86 ஆகியவற்றின் ஊடாக நாடாளுமன்றம், ஜனாதிபதி ஆகியோர் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தேவைப்படும் சட்டமூலத்தை மக்கள் தீர்ப்புக்கு முன்வைத்து அதனால் ஏற்படும் நன்மைகளை மக்கள் முன் எடுத்துக்கூறி விசுவாசத்துடன் பிரசாரம்செய்து சட்டத்தை நிறைவேற்றினால் மக்களாலேயே இச்சட்டம் உருவாக்கப்பட்டது என மக்கள் மீது பொறுப்பைச் சுமத்தி தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் முடியும். அத்துடன் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென விரும்பும் மக்களுடைய ஆதரவையும் இவ்விரு கட்சிகளும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதேவேளையில் மக்கள் தீர்ப்பில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் தோல்வியடைந்தால் சிங்கள சமூகத்துடன் சேர்ந்துவாழ தமிழர்கள் வழங்கிய இணக்கத்தை சிங்கள இனம் நிராகரித்து தமிழரை, சிங்கள இனம் தானே ஆள நினைப்பதாகவே தமிழினம் கருதும். இக்கருத்து - உறுதியாக்கப்படக்கூடியவிதத்தில் - மக்கள் தீர்ப்பு அமைந்தால் இலங்கை அரசு பிளவுபடுவது தவிர்க்கப்படமுடியாத ஒன்றாகும்.

1993இல் ஜனாதிபதி இனப்பிரச்சினை சம்பந்தமாக முன்வைத்த அரைகுறைத் தீர்வுத்திட்டத்தை - ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்ததுடன் அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றவும் மறுத்தது. அத்தருணத்தில் தீர்வுத்திட்டத்தை பேசித்தீர்க்கவேண்டிய ஒரே அமைப்பான விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்ளாமல் தமிழருடைய விடுதலைக்காகப் போராடிவரும் அவ்வியக்கத்தை தமிழரிடமிருந்து அன்னியப்படவைத்து தமிழர்மீது அரைகுறைத் தீர்வை திணிக்க அப்போதைய அரசு விரும்புகின்றது என்ற அடிப்படையில் சில கட்சிகள் அதனைக் கண்டித்திருக்கலாம். அதற்கு ஒத்தாசை வழங்க மறுத்துமிருக்கலாம். இத்தருணத்தில் இதயசுத்தியுடன் தமிழர் பிணக்கைத் தீர்க்கவேண்டும் என மேன்மை தங்கிய ஜனாதிபதி விரும்பியிருந்தால் உறுப்புரை 86இன்கீழ் மக்கள் தீர்ப்புக்கு தீர்வுத்திட்டத்தைச் சமர்ப்பித்திருக்க அதிகாரமும் வாய்ப்பும் இருந்தும் அதனை அவர் புரியாமல் தவிர்த்துள்ளதை யாபேரும் அறிவர். இதுபோன்ற பல சந்தர்ப்பங்கள் ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் கிடைத்தபோதும் எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் இனப்பிரச்சினை விடயத்தை மக்கள் தீர்ப்புக்கு விடாமல் தவிர்த்து தட்டிக்கழிக்கப்பட்டே வந்தது.

காலங்காலமாக தமிழ் மக்கள் இனப்பிரச்சினை விடயத்தில் - தாம் இழந்த உரிமையை மீண்டும் பெறும் விடயத்தில் - சிங்கள அரசால் ஏமாற்றப்பட்டு வருவதை விரும்பு மாட்டார்கள். தமிழர்கள் சிங்கள அரசுடன் இணைந்து ஆழ விரும்பும் அதே வேளையில், சங்கிலியன் ஆண்ட தமிழ்ப் பூமியை சுயத்துடன் கட்டுப்பாடுகள் இன்றி மாகாண ஆட்சியாக தமிழர்கள் ஆண்டு அனுபவிப்பதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது. அது அவர்களின் தாயக உரிமையும்கூட. இந்த வகையில் தமிழர்களுடைய அபிலாசைகளை மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற ஆட்சிமுறையை சிங்களப பெரும்பான்மை இனம் ஆதரிக்கிறதா? இல்லையா? என்பதைத் தமிழர்கள் அறிந்துகொள்ளவேண்டிய நிலை இருப்பதால் இனப்பிரச்சினை விடயத்தை மக்கள் தீர்ப்புக்கு முன்வைப்பது பொருத்தமானது. மக்கள் தீர்ப்பு தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கு, மாநில சுயாட்சிக்கு - பாதகமாக அமைந்தால் சிங்கள அரசுடன் சேர்ந்துவாழ வழங்கிய ஆணையை தமிழர்கள் மீள்பரிசீலிக்க அது ஒரு வழியாக அமையும். ★

## பாராட்டும் பிறந்த தின வாழ்த்தும்

24-02-2002

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த

**செல்வி வைத்தியநாத சர்மா பிரியஸ்கா**

அவர்கள் 2001 ஓகஸ்ட் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் **2A B** சிறந்த பெறுபேற்றைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி இன்று பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அவருக்கு நல்ல முறையில் கல்விகற்பித்த ஆசிரியப் பெருந்தகைகளுக்கு எமது உளமார்ந்த நன்றியையும் கூறுகின்றோம்.

உறவினர்கள், நண்பிகள்.

*கொக்குவில்.* (984)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1978 - 03 - 25



இறப்பு 1996 - 02 - 24


**அமரர் கந்தையா இராஜேஸ்வரன் (ராசன்)**

புண்பட்டோர் நோய் தீர்க்கப் புறப்பட்ட
புகழ்மணியே! கண்கெட்டவேளை
நெஞ்சும் கசிந்துருகும் மனங்கொண்டாய்
ராசா! நீ சென்று ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன
ஆனால் உன்முகத்தை எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் மறப்போமா?

*சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.* (1038) பிரிவால் துயருறும்: **குடும்பத்தினர்.**

## மூன்றாம் நினைவாண்டில்

அன்னை மடியில் 16 - 05 - 1936



ஆண்டவன் அடியில் 27 - 02 - 1999

**அமரர் வைரமுத்து நாகராஜா**

*(பிரபல வியாபாரி கிருலப்பனை)*

திதி: 24.02.2002

அன்புப் பெரியப்பாவே! ஆண்டு மூன்று சென்றாலும்
அழியாது உங்கள் நினைவு.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*நெல்லியான் வீதி, சுழிபுரம்.* (1005) பிரிவால் வாடும்: க. முகுந்தன் *(பெறாமகன்).*

## நெஞ்சம் மறவாத முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுறவு 17 - 11 - 1937



விண்ணமர்வு 06 - 03 - 2001

**அமரர் கந்தவனம் தவராசா**

(லட்சுமி மில் உரிமையாளர்)

திதி: 24.02.2002

அன்பின் திருவுருவே! பண்பின் சிகரமே!
பாசத்தின் உறைவிடமே!
சார்ந்தோரை வாழவைத்த தெய்வம் எம்மை ஏங்க
விட்டுப் பிரிந்து ஆண்டொன்று ஆனது.

அன்னாரது நினைவாக இன்று (24. 02. 2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

*முருகமூர்த்தி வீதி, நெல்லியடி, கரவெட்டி.* (975) பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரர்.

## 'மழலை எழுச்சி' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.24

முன்பள்ளி ஆண்டு 1,2 குழந்தைகள் பாடல் தொகுதியான மலர் சின்னையாவின் 'மழலை எழுச்சி' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் நல்லை ஆதீன இசையரங்கில் நடைபெறும்.

பாலர் கல்விக்கழகத்தின் தலைவர் இ.தவகோபால் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை பதில் அதிபர் திருமதி கலாதேவி பொன்னம்பலமும், நூல் வெளியீட்டுரையை கலாநிதி க.குணராசாவும் நிகழ்த்துவர்.

நூலின் சிறப்புப் பிரதியை யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் முன்பள்ளிகள் வருகை விரிவுரையாளர் திருமதி நா.சுந்தரலிங்கமும் பெற்றுக் கொள்வர். (க-7-180)

## 1, 218 பேர் தபால்மூல வாக்களிப்புக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,பெப்.24

அடுத்த மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்.மாவட்டத்திலிருந்து தபால்மூலம் வாக்களிப்பதற்கு ஆயிரத்து 218 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

தபால்மூலம் வாக்களிப்பதற்கென ஆயிரத்து 257 பேர் விண்ணப்பங்களை அனுப்பிவைத்திருந்த போதும் அவற்றில் 39 பேரின் விண்ணப்பங்கள் தேர்தல் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - மாநகரசபைக்கு தபால்மூலம் வாக்களிப்பதற்கு ஆகக் கூடுதலாக 189 பேரும் கரைச்சி, பிரதேச சபைக்கு மிகவும் குறைவாக ஒருவரும் தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர். (க-10)

## மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம்,பெப்.24

தென்மராட்சியில் மிருசுவில், வரணி ஆகிய இரு இடங்களிலும் அரசினர் ஆயுர்வேத வைத்திய சாலைகள் இன்னும் ஒருவாரத்திற்குள் மீண்டும் இயங்கவுள்ளன எனத் தெரிய வருகிறது.

இந்த இரு வைத்திய நிலையங்களுக்கும் தேவையான அளவு மருந்து வகைகள் தருவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (க-15)

## யாழ்.வலய அதிபர்களுக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ். வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களையும் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வலய அலுவலக மாநாட்டு மண்டபத்தில் ஒன்று கூடுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கேட்டுள்ளார். (ஐ-9)

## நாய்களுக்கு தடுப்பூசி

நெல்லியடி,பெப்.24

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள வியாபாரி மூலை கலைமணி சனசமூக நிலையத்திலும், அல்வாய் முத்துமாரி அம்மன் சனசமூக நிலையத்திலும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படவிருக்கின்றது.

இதற்கான நடவடிக்கைகளை அல்வாய் பிரிவு பொதுச்சுகாதார பரிசோதகர் மேற்கொண்டு வருகின்றார். (க-109)

## கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.24

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள ஒரு வருட முழுநேர கணனிப் பிரயோக உதவியாளர் பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதியான மார்ச் 31ஆம் திகதி 16 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

ஏனைய விவரங்களுக்கு யாழ்ப்பாணம், கோயில் வீதியில் உள்ள தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-180)

## வெளிவந்துள்ளது!

**வியாகுல பிரசங்கம் - ஒலிநாடா**

✝ 1 - 9 வரையான வியாகுல பிரசங்கங்கள்
✝ பிழைதீர்க்கிற மந்திரத்தையும் தாங்கி
✝ அருட்தந்தை J.E. ஜெயசீலன அடிகளாரின் முன்னுரையுடன்
✝ திரு.அகஸ்ரின் துரைராஜா,
திருமதி மரிய நேசமலர் அல்பிரட ஆகியோர் பாட,
ஒலிநாடா உருப்பெற்றது.

*வெளியீடு: / கிடைக்குமிடம்:* திருவழிபாட்டு நிலையம், யாழ்ப்பாணம்.
- அருட்திரு. ம.றெக்ஸ் சவுந்தரா. (1046)


## ஜோ.எகட்டனின் ஜெசித்தாராவின்


*இன்றைய ஸ்பெஷல் :* வைற் றைஸ் உடன் சிக்கன் தந்தோறி.
வழமையான உணவுப்பொதிகளும் உண்டு.
உணவு நேரம்: நண்பகல் 12.00 மணிமுதல் 3.00 மணிவரை
முன் வருபவர்களுக்கு முன் இடம் உண்டு.
**ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா** உங்கள் விருந்தகம்.
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(1032)
நவயுகத்தின் நாயகி ஜெசித்தாரா!
சுவையின் மறுநாமம் ஜெசித்தாரா!!

## நிப்பொன் (NIPPON)

மின் சிக்கன மின் குமிழ்கள்

நாடளாவிய ரீதியில் பிரசித்தி பெற்றது

உங்கள் மின் கட்டணத்தில் 80% சேமியுங்கள்



கலர் பல்புகளும் உண்டு

16 க்குமேற்பட்ட வகைகள்

மோட்ரோல்லா ரான்சிஸ்டர் THERMAL FUSE

LANKA NIPPON
No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar),
BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


அந்தியகாலச் சகாய நிதிச் சங்கம்
கட்டுவன் - மயிலிட்டி தெற்கு - வர்த்தலைவிளான்

**46ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: 10.03.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
இடம்: வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் (உரும்பிராய்)

*அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகம் தரவும்.*

க.தர்மநாயகம் தலைவர். (933) கு.சச்சனாமூர்த்தி செயலாளர்.


## மீண்டும் ஜோ. எகட்டன்

**செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்**

ஸ்தாபனத்தின் விநியோகத்தில் 70 வருட பழைமை வாய்ந்த
**தோலகட்டித் தயாரிப்புகள்**
தோலகட்டி நெல்லிரசம், முந்திரிகை ரசம்

வடமராட்சியில் மொத்த விலையில் பெற்றுக்கொள்ள:
ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பஸ் நிலையம், பருத்தித்துறை. - விநாயகர் களஞ்சியம், பெற்றோல் நிலையம் அருகில், பிரதான வீதி, நெல்லியடி.

- வியாபாரிகள், வாடிக்கையாளர்கள் தொடர்புகொள்ளவும்.
- மேலும் வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

சந்தைப்படுத்துவோர்:
**ஜோ-எகட்டன்**
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்.
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (1031)


## மரண அறிவித்தல்

**திருமதி சபாபதி வள்ளிப்பிள்ளை**

(திருநெல்வேலி)

17.02.2002 அன்று திருநெல்வேலியில் காலமான திருமதி சபாபதி வள்ளிப்பிள்ளை அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.* (1048)

தகவல்: S.தனபாலன் (மகன்). செ. பத்மநாதன் (மருமகன்).

# பேச்சுக்குத் தயார் என்கிறார் பிரதமர் ஷெரோன்; ஆயினும் இஸ்ரேலியத் தாக்குதல் தொடர்கிறது!

## 24 மணித்தியாலங்களில் 24 பலஸ்தீனர் பலி!

ஜெருசலேம்,பெப்.24

இஸ்ரேலை போருக்குள் அழைத்துச்செல்லப் போவதில்லை என்றும் -

பலஸ்தீன அதிகாரிகளுடன் பேசத் தயாராக உள்ளதாகவும் -

நேற்றுமுன்தினம் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் உறுதியளித்துள்ளார்.

இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆனால் ஷெரோன் இந்த வாக்குறுதியை வழங்கிய 24 மணித்தியாலங்களுக்குள் காஸா மற்றும் மேற்குக்கரைப் பிரதேசங்களில் 24 பலஸ்தீனர்கள் இஸ்ரேலியப் படைகள் நடத்திய வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் கொல்லப்பட்டனர்.

மத்தியகிழக்கில் வன்முறைகள் அதிகரித்து வருவதையிட்டு கவலை கொள்வதாக அமெரிக்கா தெரிவிததுள்ளது.

ஷெரோனின் வாக்குறுதி வழமையானதுதான் என்றும் -

இதேபோன்று பேச்சுக்குத் தயார் என்று கூறிக்கொண்டே பலஸ்தீன நிலைகள் மீது அவர் தாக்குதல் நடத்தியதுண்டு என்றும் -

பலஸ்தீனத் தரப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நேரில் சந்திப்பதை முற்றாகத் தடைசெய்வது குறித்து இஸ்ரேலிய அமைச்சரவை ஆராய்ந்து வருவதாக அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே ரமழாவில் உள்ள அரபாத், அங்கிருந்து வெளியேற இஸ்ரேல் தடைசெய்திருந்தது. வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே இஸ்ரேல் இதனை வர்ணித்தது.

ஆயினும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், அரபாத்தைச் சந்திப்பதைத் தடுப்பது இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச சமூகத்தின் கோபத்தைத் தூண்டிவிடக்கூடும் என்று இஸ்ரேலியத் தரப்பு தயங்குவதாகக் கூறப்படுகிறது.(ஒ-4)

# ஐ.நா. பாதுகாப்பு சபையைக் கூட்ட பலஸ்தீனத் தரப்புக் கோரிக்கை!

மேற்குக்கரை மற்றும் காஸா பிரதேசங்களில் இஸ்ரேல் முப்படைத் தாக்குதல்களை நடத்திப் பொதுமக்களைக் கொன்றுகுவிப்பது குறித்துப் பேசுவதற்கு ஐ.நா.பாதுகாப்புச் சபையை உடனடியாகக் கூட்டுமாறு பலஸ்தீன அதிகாரசபை கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கைக்கு யேமன் ஆதரவு தெரிவித்துள்ளது. ஐநாவில் அங்கம் வகிக்கும் அரபு நாடுகளின் குழுவுக்குத் தற்போது யேமன் தலைமை வகித்துவரும் நிலையில் பலஸ்தீனக் கோரிக்கைக்கு அதன் ஆதரவு வலுச்சேர்க்கும் என்று கூறப்படுகிறது.

மத்தியகிழக்கில் நடப்பதை அப்படியே விட்டுவிடமுடியாது. நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டு செல்கிறது. இஸ்ரேல் மிலேச்சத்தனமாக நடந்துவருவது நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. ஆனால் இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச்சபை மௌனம் சாதிக்கிறது.

- இவ்வாறு ஐநாவுக்கான யேமன் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

(ஒ-4)



அமெரிக்க அதிபர் புஷ்ஷின் விஜயத்தை எதிர்த்து தென் கொரியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலீஸாருடன் மோதியபோது எடுக்கப்பட்ட படம்.

# புஷ்ஷின் கோரிக்கையை வடகொரியா நிராகரித்தது

தென்கொரியாவுடன் பேச்சு நடத்தும்படி அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் விடுத்த வேண்டுகோளை வடகொரியா நிராகரித்துவிட்டது.

அதிபர் புஷ்ஷின் அழைப்பு அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று வடகொரிய வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

சில நாள்களின் முன்னர் தென்கொரியாவுக்கு அமெரிக்க அதிபர் புஷ் விஜயம் செய்ததைத் தொடர்ந்து வடகொரியா விடுத்த முதல்அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டது.

வடகொரியாவை 'பயங்கரவாதத்தின் அச்சு' என்று விமர்சித்த அதிபர் புஷ், தென்கொரியாவுடன் நட்புறவு பேணிவருவதும் -

பயங்கரவாதத்துக்கு எதிரான தமது போரின் அடுத்த இலக்காக வடகொரியா இருக்கக் கூடும் என்று அமெரிக்கா கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ-4)

# தனியாகப் படமெடுப்பதாகக் கூறி

# மணமகளுடன் 'சேஷ்டை' புரிந்த புகைப்படப் பிடிப்பாளருக்கு சிறை

## சிங்கப்பூர் நீதிமன்றம் விதித்தது

சிங்கப்பூர்சிற்றி,பெப்.24

திருமண தினத்தன்று மணமகளைப் புகைப்படமெடுப்பதாகக் கூறி, அவரது அங்கங்களை அனாவசியமாகத் தொட்டு முறைகேடாக நடந்து கொண்ட புகைப்படப் பிடிப்பாளருக்கு சிங்கப்பூர் நீதிமன்றம் ஒன்று, 28 மாத சிறைத்தண்டனையும், பிரம்படியும் விதித்தது.

மணமகளை தனியாகப் படம்பிடிப்பதாகக் கூறி, அறையில் இருந்தவர்களை வெளியே அனுப்பிய புகைப்படப்பிடிப்பாளர், தனித்திருந்த மணமகளிடம், உடைகளை ஒழுங்குபடுத்துவதாகச் சொல்லியபடி 'சேஷ்டை' புரிந்ததாகக் கூறப்பட்டது.

மணமகளின் அந்தரங்க இடத்தைத் தொட்டதற்காக 14 மாதச் சிறை மற்றும் 4 பிரம்படிகளும் -

மார்பகங்களைத் தொட்டதற்காக 12 மாதச் சிறை மற்றும் இரு பிரம்படிகளும் -

முத்தமிட்டதற்காக இரு மாதச் சிறைத் தண்டனையும் - புகைப்படப் பிடிப்பாளருக்கு விதிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# கொல்லப்பட்ட டானியல் பேர்ல் செய்தியாளரா? உளவாளியா?

கராச்சி,பெப்.24

பாகிஸ்தானில் கொல்லப்பட்ட அமெரிக்கப் பத்திரிகையாளர் உளவுபார்க்கும் வேலையில் ஈடுபட்டதாக பாகிஸ்தானில் வெளியாகும் தீவிரவாத சார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



டானியல் பேர்ல்

தனது சப்பாத்துக்குள் வெடிபொருளை எடுத்துச் சென்று அமெரிக்கப் பயணிகள் விமானம் ஒன்றைத் தகர்க்க முயற்சித்தபோது கைதுசெய்யப்பட்ட ரிச்சேர்ட் ரெய்ட் என்பவருக்கும், இஸ்லாமியத் தீவிரவாதியான ஒஸாமா பின்லேடன் மற்றும் அவரது அல்கெய்டா அமைப்புக்கும் இடையே தொடர்புண்டா என்பதைக் கண்டறியும் முயற்சியில் செய்தியாளர் 'டானியல் பேர்ல்' ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

'வோல் ஸ்ரீட் ஜேர்னல்' பத்திரிகையின் செய்தியாளராகத் தன்னை அடையாளம் காட்டிக்கொண்டு, உளவு வேலைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே தீவிரவாதிகள் பேர்லை கடத்திக் கொன்றதாக மேற்படி பத்திரிகை தெரிவிக்கின்றது.

அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ள ரெய்டை பின்லேடனுடன் தொடர்புபடுத்தும் ஆதாரங்கள் கிடைத்தால், பயங்கரவாதத்துக்கு எதிரான தனது போருக்கு மேலும் பலம்கிட்டும் என்பதால் அந்த ஆதாரங்களை திரட்ட டானியல் பேர்ல் அனுப்பப்பட்டார் எனத் தீவிரவாதிகள் கருதியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனாலேயே கராச்சியில் வைத்து கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி தீவிரவாதிகளால் டானியல் பேர்ல் கடத்தப்பட்டார். அவர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

## இந்தியா மறுப்பு

இந்தியக் கட்டுப்பாட்டு காஷ்மீர் பகுதியில் ஒஸாமா பின்லேடனை தேடும் பணியில் அமெரிக்கப் படைகள் ஈடுபடப்போவதாகக் கூறப்படுவதை இந்தியா மறுத்துள்ளது. (ஒ)

# பேர்ல் கொல்லப்பட்டதை விவரிக்கும் ஒளிநாடா!

கராச்சி,பெப்.24

அமெரிக்காவின் 'வோல் ஸ்ரீட் ஜேர்னல்' பத்திரிகையின் செய்தியாளர் டானியல் பேர்லின் கழுத்தை அறுத்து அவரைத் துடிக்கத் துடிக்கக் கொன்றதை நிரூபிக்கும் ஒளிநாடா ஒன்றை தீவிரவாதிகள் இரகசியமாக அனுப்பியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த ஒளிநாடா குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

செய்தியாளர் பேர்ல் பேட்டிகாண்பது போல் பேசிக்கொண்டு இருப்பதும் -

அப்போது அவரது கழுத்து நீண்ட கத்தியால் திடீரென்று அறுக்கப்பட்டு கொலைசெய்யப்படுவதும் -

ஒளிநாடாவில் படமாக்கப்பட்டுள்ளன.

சுமார் 3 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த ஒளிநாடாவில், பேர்லின் முகமே பிரதானமாகத் தெரிகிறது. கழுத்தை அறுத்த தீவிரவாதியின் கைமட்டுமே தெரிகிறது.

கராச்சியைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவருக்கு இந்த ஒளிநாடாவை தீவிரவாதிகள் இரகசியமாக அனுப்பியுள்ளனர்.

அவர் அதனைக் கடந்த 21ஆம் திகதி சிந்து மாகாண அரசிடம் ஒப்படைத்துள்ளார்.

. கொலை செய்யப்படுவதற்கு முன்னர் பேர்ல் 'நான் ஒரு யூதன்; எனது தந்தையும் யூதர்' என்று கடைசியாகக் கூறியிருந்தது ஒளிநாடாவில் பதிவாகியிருந்ததாக அதனைப் பார்த்த பாகிஸ்தானிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

# ரஷ்யாவில் விமான விபத்து; பதினேழு பேர் உயிரிழப்பு!

மொஸ்கோ,பெப்.24

ரஷ்யாவில் நேற்று இடம்பெற்ற விமான விபத்து ஒன்றில் பதினேழு பேர் உயிரிழந்தனர்.

கடற்பகுதியில் நின்று கொண்டிருந்த ரஷ்யக் கடற்படைக் கப்பலில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு மொஸ்கோ திரும்பிக்கொண்டிருந்த 12கடற்படை அதிகாரிகள் மற்றும் 5விமானப் பணியாளர்கள் இருந்த விமானமே வீழ்ந்துநொறுங்கியது.

அர்கான் கெல்ஸ்க் நகரத்தின் மீது பறந்துகொண்டிருந்த சமயம் விமானத்தில் கோளாறு ஏற்பட்டிருப்பதாக விமானிகள் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திடம் தெரிவித்ததாகவும் -

இதனைத் தொடர்ந்து அண்மையில் இருந்த லாக்டா விமானப் படைத்தளத்தில் தரையிறங்க முற்பட்ட போது விமானம் தரையில் வீழ்ந்து நொறுங்கியதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

# அமெரிக்காவில் முதல்தடவையாக

# நாடாளுமன்ற புலனாய்வுக் குழு அதிபர் மாளிகை மீது வழக்கு!

வாஷிங்டன்,பெப்.24

அமெரிக்காவில் முதல்தடவையாக அதிபர் மாளிகைக்கு எதிராக நாடாளுமன்ற புலன்விசாரணையாளர்கள் வழக்குத் தொடுத்துள்ளனர்.

அமெரிக்கத் துணை அதிபர் டிக் சென்னிக்கும், பண முறிவுக்குள்ளான 'என்ரான்' நிறுவனத்தினருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்புகளின் விவரங்களை வெளியிட உத்தரவிடும்படி நாடாளுமன்ற புலன் விசாரணையாளர்கள் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர்.

அரசியல் நிர்வாக அமைப்பு ஒன்றுக்கு எதிராக நாடாளுமன்றப் புலன் விசாரணை அமைப்பு வழக்குத் தொடர்ந்திருப்பது அமெரிக்க வரலாற்றில் இதுவே முதல்தடவை என்று கூறப்படுகிறது.

அமெரிக்க நிறுவனங்களில் முக்கியமானதாகக் கருதப்பட்ட 'என்ரான்' கடந்த ஆண்டு திடீரென்று பண முறிவுக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை செய்துவரும் அமெரிக்க நாடாளுமன்றப் புலனாய்வுக்குழுவினரே இந்த வழக்கைத் தொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# பணயக் கைதிகள் தொடர்பாக அமெரிக்கா புதிய கொள்கைகள்

வாஷிங்ரன்,பெப்.24

பணயக் கைதிகள், கடத்தல்காரர்கள் குறித்த புதிய கொள்கைத் திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது குறித்து வெளிநாட்டு இலாகா அதிகாரி ரிச்சர்ட் பவுச்சர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

பணயக் கைதிகளை மீட்பதில் அமெரிக்கா இனி உறுதியான கொள்கைகளைப் பின்பற்றும். கடத்தல்காரர்களின் மிரட்டலுக்கு நாம் அஞ்சமாட்டோம்.

கடத்தல்காரர்கள் கேட்கும் பணத்தையோ, பொருளையோ கொடுக்கக்கூடாது என்பதுதான் அமெரிக்க அரசின் கொள்கை. தனியார் நிறுவனங்களும் இதுபோல் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பணயக் கைதிகளை மீட்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும். ஆனால் கடத்தல்காரர்களின் கோரிக்கைகளுக்குப் பணியாது. பொதுவாக கடத்தல்காரர்களை ஊக்கப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் எடுக்க மாட்டோம் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

டீசல் ஜெனரேட்டர்கள்
KIRLOSKAR

Payment in Six Years under Indian Credit Line
500 க்கும் மேற்பட்ட Kirloskar ஜெனரேட்டர்கள் தற்போது இலங்கையில்
5 KVA - 2 Nos.
7.5 KVA - 3 Nos.
10 KVA - 6 Nos.
15 KVA - 1 No.
25 KVA - 2 Nos.
30 KVA - 2 Nos.
35 KVA - 1 No.
50 KVA - 1 No.
70 KVA - 2 Nos.
100 KVA - 2Nos.
125 KVA - 5 Nos.
160 KVA - 2 Nos.
200 KVA - 2 Nos.
250 KVA- 3 Nos.
Available for shipment within 2 weeks
Contact - Shamal/Surendra - Tel : 691186
MACKWOODS LTD.
No.10, Gnanartha Pradeepa Mawatha, Colombo 8. Tel: 697965-9, 696051-2, Fax: 699454

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (886)

இறைச்சிக்கோழி BROILERS, கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (1042)

தரமான புறோயிலர் கோழிகள் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் செவ்வாய், வெள்ளி, தவிர்ந்த ஏனைய நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- S.குமரன், 227, பிறவுண்வீதி, (நரிக்குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (1061)

## விற்பனைக்கு

புதிய SONY (JAPAN) ED I டெக், PANASONIC ஓடியோ CDசெற், PANASONIC (NV-SD235) டெக் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.நந்தசீலன், பிப்பிலிச் சந்தி, மானிப்பாய். (967)

நான்கு மாத சினையுடன் நான்கு குட்டியோடும் ஆடு மற்றும் புதிய நாய்க் கூடு, கோழிக்கூடுகள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறுகளில். தொடர்பு: 75, செட்டித்தெரு, நல்லூர். (980)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினைப் பகுதியில் 7½ பரப்புக் காணி, கிணறு, வீடு மற்றும் தோட்டக்காணி (12 பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தம்பிராசா இராசரத்தினம், குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (974)

மானிப்பாய் தெற்கு, மானிப்பாயில் 3½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. சுற்றுமதில், கிணறு மற்றும் பிரயோசனங்களும் உண்டு. தொடர்பு: மா.திருச்செல்வம், லோட்டன் வீதி, மானிப்பாய்தெற்கு, மானிப்பாய்.(890)

கட்டுடை, மானிப்பாயிலிருக்கும் சகல வசதிகளும் கொண்ட "மங்களகிரி" எனும் வீடும், 10 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.தவராசா, பெற்றோல் செற், உரும்பிராய் காலை 9.00 மணிமுதல மாலை 4.00 மணிவரை, தொடர்பு கொள்ளலாம். (1053)

நல்லின புகையிலை நாற்றுக்கள (வடமராட்சி கூரன் தட்டையன், சாரைவால் குழையன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: N.சிவலிங்கம், பெற்றோல் செற் முன்பாக, பலாலி வீதி, உரும்பிராய். (1054)

45 நாள்கள் நிரம்பிய அழகிய சாம்பல் நிற பொமனேரியன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அல்பிறேட், 25, பாக் றோட், றெக்கிளமேசன், யாழ்ப்பாணம். (1055)

கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் இல.73(43)இல் 9 பரப்புக்காணி (சகல வசதிகளும் கொண்ட) வீடு உடன் விற்பனைக்கு உண்டு. மேலும் இக் காணியில் இரண்டு வீடுகள் கட்ட அனுமதிபெற்ற வீட்டு வரைபடங்களும இருக்கின்றன. தொடர்பு: C.வில்லவராயன், 11, சங்கிலியன்வீதி, யாழ்ப்பாணம். (883)

## தவறிவிட்டது

26, காட்டுக்கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுந்தரேசன் என்பவருடைய விசேட அ.அ. (இல.901007445) நல்லூர் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 69, வைமன் வீதி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (1041)

வேலணை மேற்கு, வேலணையைச் சேர்ந்த, நாகரத்தினம் நாகேஸ்வரன் என்பவருடைய தே.அ.அ.(இல. 761260978V), விசேட அடையாள (இல. 091205049), கூப்பன், பயணிகள் அடையாள அட்டை என்பன றக்கா வீதிக்கும் கொக்குவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 425, நாவலர் வீதி, ஆனைப்பந்தி அல்லது உழவர் களஞ்சியம், பலாலி வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1019)

## மணமகள் தேவை

யாழ்ந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் நிரந்தர வதிவுரிமை பார்க்கும், செவ்வாய்க் குற்றமற்ற, 32 வயது மணமகனுக்கு நற்குணமுள்ள மணமகள் லண்டனில் தேவை. லண்டனுக்கு அனுப்பிவைக்கக்கூடியவர்களும் விரும்பத்தக்கது. தொடர்பு: வி.இல. 1470, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (1035)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY



### கதாதரன் ஜெயந்தரன் (நிலா)

பருத்தித்துறை, ஓடக்கரையைச் சேர்ந்த

**கதாதரன் - கவிதா தம்பதியினரின**

செல்வப் புதல்வன **ஜெயந்தரன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று(24-02-2002) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். ஜெயந்தரனை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பாட்டி, சித்தப்பம்மா, அம்மம்மா, பெரியன்ரா, சின்னன்ரா, குட்டியன்ரா ஆகியோர் சக்தியின் துணையில் பல்கலையும் பெற்று சீர்சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர்.

க.குணலிங்கம் - இராசேஸ்வரி
*அப்பப்பா - அப்பம்மா.*

*பருத்தித்துறை.* (C/20860)

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 1940 - 07 - 08



மறைவு 2002 - 01 - 25

### திருமதி பாலசுப்பிரமணியம் தங்கம்மா

கருணையின் வடிவமே!
பாசத்தின் உறைவிடமே - எங்கள் அம்மா!
எப்போது உங்கள் முகம் காண்போம்? - இனி
எப்போது உங்கள் குரலைக் கேட்போம்?
கண்மூடி விழிப்பதற்குள் எல்லாம் நடந்து முடிந்தனவோ!
நிலையில்லா இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து, எங்கே சென்றீர்கள்?
ஆலம் விழுதுகள் போல உறவுகள் ஆயிரம்
இருந்தும் என்ன? வேர் என நீங்கள் இருந்தீர்கள் அம்மா!
இன்று அநாதைகளான எங்களுக்கு இனியார் ஆறுதல் அம்மா?
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைவதாக!

*ஓம் சாந்தி!*

*இராச வீதி,*
*நீர்வேலி மேற்கு.* (1052)

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
**பிள்ளைகள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 - 03 - 1923



மறைவு 06 - 03 - 2001

அமரர்

### கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

எங்கள் நல்வாழ்வுக்காக நாளும் உழைத்து
எம் முன்னேற்றத்தில் பங்குகொண்டு வாழ்ந்த
எம்மினிய பாசத்தின் உறைவிடமே! அப்பா!
எங்கள் உயிர் இவ்வுலகில் இருக்கும்வரை
என்றும் எப்பொழுதும் உங்கள் நினைவுடனே வாழ்வோம்.
நீங்கள் மறைந்து ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
கடந்தாலும் உங்கள் உருவம் எம் நெஞ்சங்களை விட்டு
நீங்கவே நீங்காது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*1010/12C, கே.கே.எஸ்.வீதி,*
*நாச்சியார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (1047)

- குடும்பத்தினர்.

தென்னிந்தியத் திருச்சபை யாழ்.பேராயம்

## 55ஆவது வருடாந்த மாநாடு

2002 பெப்ரவரி 25,26ஆம் திகதிகள் வட்டுக்கோட்டை

நிகழ்ச்சி நிரல்

*ஆரம்ப வழிபாடு:* 25.02.2002 திங்கட்கிழமை 8.30 a.m.
*செய்தி:* அருட்திரு.S.சலொமன்
9.00a.m பேராயர் பேருரை
26.02.2002 செவ்வாய் 8.30 a.m.
*திருவிருந்து வழிபாடு*
*செய்தி:* அருட்திரு.சனோக் P.புனிதராஜா
*தலைவர்:* அதிவண.கலாநிதி பேரறிஞா எஸ்.ஜெபநேசன்
இரு நாள்களும் முழுநாள் நிகழ்வாக யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அருட்திரு.G.நடராஜா
காரியதரிசி
*தென்னிந்தியத் திருச்சபை.*

(சி-20862)

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் இராசரத்தினம்

கோண்டாவில் மேற்கு உப்புமடத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கு, அரசடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசரத்தினம் அவர்கள் 22.02.2002 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் கனகாம்பிகை அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, பாக்கியம், கண்மணி மற்றும் இரத்தினம், இராசாத்தி, பொன்மணி ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற இரட்ணாம்பிகை மற்றும் ஜெயரட்ணம்(வலி.கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், நீர்வேலி), இரத்தினேஸ்வரி(சுவிஸ்) ஜெயமாலதி, பவானி(சுவிஸ்) ஆகியோரின் பாசமுள்ள தந்தையாரும் சர்வலோகநாயகி, மகேந்திரன்(சுவிஸ்) கண்ணபிரான், கிருஷ்ணாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.02.2002 வெள்ளிக்கிழமை இணுவிலில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"கந்தமாதனம்"*
*இளந்தாரி கோயிலடி,*
*இணுவில் கிழக்கு* (1056)

தகவல்:
இ.ஜெயரட்ணம் (மகன்)

## திருமதி சிவஞானவல்லி நவரத்தினம்

இல.17, 2ஆம் குறுக்குத்தெரு, நல்லூரைப் பிறப்பிடமாகக்கொண்ட காலஞ்சென்ற தம்பையா - இரத்தினம் தம்பதியினரின் மகள் திருமதி சிவஞானவல்லி நவரத்தினம் 16-02-2002 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கொக்குவில் குளப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் - நவரத்தினம்(P.W.D. ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமாரன் (புறோமோட்டோஸ் எஞ்சினியறிங் கொம்பனி உரிமையாளர்), சண்முககுமாரன்(லண்டன்), தெய்வகுமாரன்(அமெரிக்கா), நடேசகுமாரன்(அமெரிக்கா), நடனகுமாரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம்(ஓவசியர், திருகோணமலை - மூதூர்) மற்றும் இரத்தினசபாபதி, சோதிமணி ஆகியோரின் சகோதரியும் லோகா, இந்திராணி, காயத்திரி, ஜெயகுமாரி, யசோதா, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் அஞ்சுளா, அனுயா, லவன், ஆரணி, லட்சுமி, கண்ணன், சுரேன், தாரணி, கிருபன், கோகிலன், திவ்வியா, கார்த்திகாயினி, கௌசிநிவாசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கொக்குவில் குளப்பிட்டியைச் சேர்ந்த கந்தையா சேனாதிராசா, சபாரத்தினம், சிவபாதம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24-02-2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு ஜெயரத்தினம் மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை, இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்தட்டுமட வீதி,*
*கோண்டாவில் மேற்கு.*
***T.P. 01- 592245***
*வெள்ளவத்தை, கொழும்பு.* (1062)

தகவல்:
சிவபாதம் சணேசலிங்கம்.

## திருமதி பூபதி கிருஷ்ணராஜா

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூபதி கிருஷ்ணராஜா 16.02.2002 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கிருஷ்ணராஜா (பிள்ளையார்) அவர்களின் அன்பு மனைவியும் சந்திரயோகினி, இந்திராணி, இந்திரகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற ரவிக்குமார் மற்றும் சிவகுமார் (ஜேர்மனி), செல்வக்குமார் (சுவிஸ்), செல்வயோகினி (கனடா), கிருஷ்ணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இருபாலை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (1051)

தகவல்:
வ.கிருஷ்ணராஜா (கணவர்)
(காரச்சாரதி - பிள்ளையார்)

## வேலன் கந்தையா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கந்தையா 22.02.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் - பொன்னியின் மூன்றாவது புதல்வரும் சோமு - இராசம்மாவின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மநாதன் (உடுவில்), இரத்தினசிங்கம் (பிரான்ஸ்), வில்வராசா (சுவிஸ்), ரவீந்திரநாதன் (சுவிஸ்), நாகரத்தினம் (வன்னி), நாகேஸ்வரி (ஜேர்மனி), நாகபூஷணி (ஊர்காவற்றுறை), அமுதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தம்பித்துரை, விற்றர், கனகராசா, பாஸ்கரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உருண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மண்குழு வீதி,*
*ஊர்காவற்றுறை.* (1063)

தகவல்:
பா.சஞ்சி (பேரன்)

# கசிப்பு வழக்கில் நால்வருக்கு 48 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,பெப்.24

கசிப்பு விற்பனை செய்த மற்றும் அதனை வைத்திருந்த நால்வருக்கு யாழ். நீதிமன்றினால் 48 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் இடம்பெற்றபோதே நீதிவான் இ.த.விக்னராஜா இந்த உத்தரவினை விடுத்தார்.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த பரமு இரத்தினசிங்கம் என்பவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், இருபாலை கானான் சிறுவர் பராமரிப்பு இல்லத்துக்கு 3 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

இணுவில் கிழக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வல்லிபுரம் என்பவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவுக்கு 1000 ரூபாவும் -

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த அரசரட்ணம் றினோஜன் என்பவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், இருபாலை கானான் சிறுவர் பராமரிப்பு இல்லத்துக்கு 3 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த அருள் தவராசா என்பவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், யாழ. மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவுக்கு 1000 ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட 22 பேருக்கு எதிராக கடந்த புதன்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்றில் மதுவரிப் பரிசோதகர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. தமது குற்றத்தை இவர்கள் ஒப்புக்கொண்டதை அடுத்து இவர்களுக்கு 79 ஆயிரம் ரூபா அபராதம் நீதிவானால் விதிக்கப்பட்டது.

இந்த மாதத்தில் அதிக எண்ணிக்கையான கசிப்பு உற்பத்தி மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பான வழக்குகள் அன்றைய தினமே யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.(க-10-6)

## பண்ணாகத்தில் கலாசார மண்டபம்

பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தினர் பன்னிரண்டு லட்சம் ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்றை கட்டி வருகின்றனர். பண்ணாகம் விசவத்தனை முருகன் கோயிலுக்கு அருகில் கட்டப்படும் இக்கட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (க-28)


நாளைமுதல் 3 நாள்களுக்கு...

திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

ஓவியக் கண்காட்சி

காலம் : 25,26,27 பெப்ரவரி - 2002 (திங்கள், செவ்வாய், புதன்)

நேரம் : தினமும் காலை 9.00 மணி - 5.00 மணிவரை

இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு

பிரவேசம் : இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நாடக அரங்கியற் கண்காட்சி
மார்ச் மாதம் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறும்

(C/20865)



தேவை

- ★ PAPER CUTTING மெஷினில் வேலை செய்யக்கூடிய BINDER ஒருவர்,
- ★ PLATEN அல்லது CYLINDER MACHINE OPERATOR ஒருவர்,
- ★ அலுவலக உதவியாளர் (PEON) ஒருவர் தேவை.

28.02.2002ஆம் திகதிக்கு முன் நேரில் வருக.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(C/20861)


## துயர் பகிர்கின்றோம்

எமது அன்பு நண்பன் திரு.சிவலிங்கம் கருணாராஜா
(யாழ்.போதனா வைத்தியசாலை)

அவர்களின் அன்புத் தந்தையார் **சிவலிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஞானம், துரைச்சாமி, சிவா, குகன், செல்வம், பாலா (கராச் - சாவா)

*கல்வயல் சாவகச்சேரி* (1068)

## மரண அறிவித்தல்

### கந்தையா குகதாசன்

கந்தையா குகதாசன் நேற்று (23.02.2002) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பராசக்தி தம்பதியினரின் அன்பு மகனும் உலகநாயகியின் அன்புக் கணவரும் பரம கல்யாணியின் அன்புச் சகோதரரும் சிவகுரு, இராசரத்தினம், கனகநாயகம், சண்முகலிங்கம், உலகநாதன், சாவித்திரி(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறிதரன்(ஆஸ்திரேலியா), சிறிரஞ்சனி (ஆஸ்திரேலியா), கெங்காதரன்(கனடா), கனகேந்திரன்(கனடா), துஷ்யந்தி (கனடா), சிவப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரபோஸ் (ஆஸ்திரேலியா), உமாமகேசன்(கனடா), சசிக்குமார்(கொழும்பு), செல்வி (ஆஸ்திரேலியா), சுகந்தி(கனடா), அனுசியா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*42, மூர் றோட், வெள்ளவத்தை, கொழும்பு - 06 தொ.பே.: 581563* (1072)

தகவல்:
நா.சண்முகலிங்கம்
(பொன்னுச்சாமி)
*537, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.*

## சமய சந்நிதியில்

வடமராட்சி அல்வாய் மேற்கு தேவரையாளி கண்ணகை அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம் எதிர்வரும் 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

20ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்தைத் தொடர்ந்து சங்காபிஷேக விசேட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-9)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.24

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு வட்டு இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. றெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார். (3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.24

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவை ஒட்டி நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30மணி - உரும்பிராய் வைத்தீஸ்வரா எதிர் சுன்னாகம் கலைவாணி.

★பிற்பகல் 4.30மணி - நவாலி தென்றல் எதிர் உடுவில் சிந்து.(3)


புலமைப்பரிசில் பரீட்சை - 2002
இன்று நடைபெறாது!
பரீட்சை இல.26
புதன்கிழமை நடைபெறும்.
BOND யாழ்நகர்.
(1071)



MURTHI ADVERTISING SERVICE
2789
பலாலி யாழ் சேவையில் விளம்பரம் செய்ய விரும்புகிறீர்களா?
☆ பிறந்தநாள் ☆வர்த்தக விளம்பரம் ☆ மரண அறிவித்தல் எதுவானாலும் எமக்கு போன் செய்யுங்கள்.
மூர்த்தி அட்வர்டைஸிங் சேவிஸ்
தேவி அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம்
(1057)


## தவறிவிட்டது

கைதடி மேற்கு, கைதடியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஐயம்பிள்ளை என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 251670129V), விசேட அடையாள அட்டை (இல.091006478) என்பன 17.02.2002 அன்று திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய முகவரியில் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (1060)


நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த் (இருவேடம்), சௌந்தர்யா, வடிவேல், வடிவுக்கரசி நடித்த
தவசி
காட்சிகள்: 11.00, 2.00 (புதிய நேரம்)
(1090)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், ஜோதிகா நடித்த
பூவெல்லாம் உன் வாசம்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

லஷ்மி இணுவில்
முரளி, தேவயானி, வடிவேல்
கண்ணுக்கு கண்ணாக
காட்சிகள்: 10.10, 2.30 (புதிய நேரம்)


## கண்ணீர்க் காணிக்கை

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய அதிபர்

திரு.செ.சிவஞானம் அவர்களின் அன்புத் தந்தையார்

**அருணாசலம் செல்லத்துரை**

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர், நண்பர்கள், பெற்றோர், அபிவிருத்திச் சபையினர்.

*கல்வயல்.* (1067)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பர் செல்லப்பா

(புத்தூர்)

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் செல்லப்பா அவர்கள் 22.02.2002 அன்று காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் சற்குணபூபதி (கைப்பணி ஆசிரியை, அச்செழு), பத்மாவதி (கைப்பணி ஆசிரியை, நீர்வேலி), துரைசிங்கம் (நில அளவையாளர், வவுனியா), தனபாலசிங்கம் (நில அளவையாளர், யாழ்ப்பாணம்), சிவபாதசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இலட்சுமி மற்றும் சின்னப்பு, மாணிக்கம், தம்பிராசா (இளைப்பாறிய ஆசிரியர்), சின்னத்துரை (கனடா, முன்னாள் வான் அளவை பட தொழில்நுட்பவியலாளர், நில அளவைத் திணைக்களம்), காமாட்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் வைத்தீஸ்வரன் (முன்னாள் முகாமையாளர், பளை ப.நோ.கூ.சங்கம்), கனகரத்தினம் (முன்னாள் போதனாசிரியர், மரவேலைப் பாடசாலை, சுன்னாகம்), சகுந்தலாதேவி, பாமினி (ஆசிரியை, நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), ரதிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்மலிங்கம் (வவுனியா), நடராஜா (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிரஞ்சனி, சண்முகப்பிரியா (வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்), மகிஜா, வேணுஜா, திவ்யா (வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய மாணவிகள்), ஆரண்யா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவி), சஞ்சிதன், சாருகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு புத்தூர் கிழக்குப் பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் கிழக்கு.* (1065)

தகவல்:
செ.தனபாலசிங்கம் (மகன்)
(அரச நில அளவையாளர்)

## திருமதி மகேஸ்வரி (சில்வியா) சுந்தரமூர்த்தி

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி (சில்வியா) சுந்தரமூர்த்தி அவர்கள் நேற்று (23.02.2002) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும், திருமதி சரஸ்வதி செல்லையாவின் மைத்துனியும், பாஸ்ரர் சு.மகேசன் (கனடா), திருமதி ரதிதேவி குணச்செல்வம் (கொழும்பு), வால்ரர் ரகுநாதன் (ஜேர்மனி), திருமதி அன்னராணி விநோதானந்தன் (சுண்டிக்குளி), பாஸ்ரர் ஜோனாத்தான் (சுண்டிக்குளி), திருமதி சுந்தரரூபி நாராயணபிள்ளை (குவைத்), குகதாசன் மணி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி சிவகுமாரி (கனடா), பாஸ்ரர் மேவின் குணச்செல்வம் (எக்காளத்தொனி பூரண சுவிஷேச சபை, யாழ்ப்பாணம்), திருமதி இங்குளோறி (ஜேர்மனி), விநோதானந்தன் (பிரதேச செயலகம், நல்லூர்), திருமதி தெய்வநாயகி (திலகம், சுண்டிக்குளி), நாராயணபிள்ளை (குவைத்), திருமதி தயா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகு, சுஜி, ஜெபி, போல், ராஜ் (கனடா), ஸ்ரெலா பீற்றர் (FAROE ISLAND), போல் றேச்சல் (இங்கிலாந்து), கிறிஸ்ரீன் (இங்கிலாந்து), யோனகான், யோனகா, யோனதி, யோனதாப் (சுண்டிக்குளி), நிருஷன், குகதயனி, ஷியாமினி (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியும் சாரோன், சாரா (FAROE ISLAND), டேவிட், ஜோசுவா (இங்கிலாந்து) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபையோர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"எக்காளத்தொனி பூரண சுவிஷேச சபை" இல.21, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.* (1064)

தகவல்
திரு.கி.விநோதானந்தன்
(மருமகன்),
(பிரதேச செயலகம், நல்லூர்)

## திருமதி சிவஞானம் மகேஸ்வரி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வவுனியாவில் வசித்தவருமான திருமதி சிவஞானம் மகேஸ்வரி அவர்கள் 22.02.2002 வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி - பராசக்தி தம்பதியினரின் அருமைப் புதல்வியும், இரத்தினசபாபதி (ஓய்வுபெற்ற கணக்காளர், லண்டன்), காலஞ்சென்ற கனகசிங்கம் (கொக்குவில்), தியாகராசா (பொறியியலாளர், பிரேஸில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும், பூபாலேந்திரா (மருந்தாளர், முல்லைத்தீவு அரசாங்க வைத்தியசாலை), குணபாலேந்திரா (கனடா), காலஞ்சென்ற ஜெயபாலேந்திரா (ஏழாலை), காலஞ்சென்ற தனபாலேந்திரா (கனடா), மகேந்திரநாத் (மணிக்கூடு திருத்துநர், ஓமந்தை), காலஞ்சென்ற சகுந்தலாதேவி (கொக்குவில்), சரோஜினிதேவி (நாவலர்), இந்திராதேவி (கனடா), பாலநாத் (ஜேர்மனி), பாலேந்திரன் (ஜேர்மனி), தேவபாலேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலாதேவி (இளைப்பாறிய மருத்துவ மாது, மல்லாகம்), குஞ்சு (கனடா), புவனராணி (இளைப்பாறிய அதிபர், சைவப்பிரகாச வித்தியாசாலை, வவுனியா), மங்களாதேவி (பாலர் பாடசாலை பயிற்சி நிலைய வெளிக்கள உத்தியோகத்தர், மூளாய்), காலஞ்சென்ற பாலச்சந்திரன் (ராஜாராம் ரான்ஸ்போட் சேவிஸ், கோண்டாவில்), காலஞ்சென்ற துரைசிங்கம் (வியாபாரம்), விக்கினேஸ்வரன் (கனடா), ஞானம் (ஜேர்மனி), திருமதி பாலேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.02.2002) சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றுப் பூதவுடல் மாலை 5.00 மணிக்கு ரம்பைக்குளம் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குசைப்பிள்ளையார் கோயிலடி, ரம்பைக்குளம், வவுனியா. T.P.024-22519* (1069)

தகவல்:
சி.மகேந்திரநாத்
(மகன்)

# இன்று நடக்கும் பாதயாத்திரையிலும் பங்கேற்குமாறு மக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

சமாதானத்திற்கான சர்வமத பாதயாத்திரைக்கு நேற்று முதல் நாள் பொதுமக்கள் நல்கிய பூரண ஆதரவைப் போன்று இன்றும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென 'சமாதானத்திற்கான சர்வமத பாதயாத்திரை ஒழுங்கமைப்புக்குழு' வேண்டுகோள் விடுத்துள்ளது.

'நேற்றைய யாத்திரைக்கு பூரண ஒத்துழைப்பை நல்கிய அனைத்து தரப்பினருக்கும் - குறிபாக தீவக பிரதேச மக்களுக்கு - நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்றைய யாத்திரையிலும் அனைத்து மக்களும் கலந்து கொண்டு "நிலையான சமாதானத்தின மீதான" ஆவலை வெளிப்படுத்த வேண்டும்' - என்று ஒழுங்கமைப்புக் குழு கேட்டுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் நடைபெறும் பிரார்த்தனை நிகழ்வை தொடர்ந்து காலை 9 மணிக்கு யாத்திரை புறப்படும்.

கந்தர்மடம் - அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி ஊடாக காலை 10 மணியளவில் நாச்சிமார்கோயில் முன்றிலை அடையும்.

அங்கிருந்து முற்பகல் 10.30 மணியளவில் புறப்படும் யாத்திரை, மருதனார்மடம் ஊடாக நண்பகல் 12.30 மணியளவில் சுன்னாகத்தை அடையும்.

மதிய இடைவேளையின் பின்னர் பிற்பகல் 1.30 மணியளவில் மீண்டும் ஆரம்பமாகும் பாதயாத்திரை சுன்னாகம், மல்லாகம் ஊடாக மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன்றிலைச் சென்றடையும்.

ஆலய முன்றிலில் இடம்பெறும் ஒன்றுகூடலைத் தொடர்ந்து யாத்திரை நிறைவுபெறும். ஒன்றுகூடலின் இறுதியில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கான 'சமாதானச் செய்திகள்' அனுப்பி வைக்கப்படவுள்ளன.

(ஐ-6-9)

## பாதயாத்திரை வெற்றி பெற ஆசி

யாழ்ப்பாணம்,பெப்.24

சர்வமத சமாதான பாதயாத்திரை தொடர்பாக தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி விடுத்த செய்தி வருமாறு:-

இன்று எமது நாட்டுக்குத் தேவையான விடயமாக உள்ளது சமாதானம் ஆகும். இந்த வகையில் சமாதானத்தை வலியுறுத்தி பல்வேறு இடங்களிலும் பல நிகழ்வுகள் நடைபெறுவது கண்கூடு.

எமது யாழ்.நகரிலும் இத்தகைய சமாதானப் பேரணி நடைபெறுவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இச்சமாதானப் பாதயாத்திரையை ஒழுங்குசெய்த நிறுவனங்களுக்கும், மதத் தலைவர்களுக்கும், ஏனையோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்பாதயாத்திரை மூலம் தமது எண்ணத்தை எட்ட திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

(ஐ)

## நேற்றைய சர்வமத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாத்திரைக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கும் விதமாக - சமாதானத்திற்கான சர்வமத பாதயாத்திரை ஒழுங்கமைப்புக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க - வேலணை கடற்படை முகாம் படையினர் தமது இராணுவ முகாமினூடு யாத்திரை செல்ல அனுமதி வழங்கினர்.

இதனையடுத்து ஏற்கனவே திட்டமிட்ட யாத்திரையின் பாதையில் சிறிய மாற்றம் செய்யப்பட்டது.

சின்னமடு மாதா கோவிலில் ஆரம்பித்த யாத்திரை வேலணை வங்களாவடிச் சந்தியை அடைந்து, அங்கிருந்து சாட்டி மாதா ஆலயம் - மண்கும்பான் பிள்ளையார் கோவிலடி ஊடாக அல்லைப்பிட்டிச் சந்தியை அடைந்து அங்கிருந்து யாழ் - ஊர்காவற்றுறை பிரதான வீதி ஊடாக நகர்ந்து யாழ்.நகரினுள் நுழைந்தது. பாதையெங்கும் தீவகப் பகுதி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஆங்காங்கு கூடி யாத்திரையில் கலந்துகொண்டு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கினர்.

பாதயாத்திரை யாழ்.நகரினுள் மாலை 3.30மணியளவில் நுழைந்ததும் துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் கூடிநின்ற பெரும் எண்ணிக்கையான நகரப் பாடசாலைகளின் மாணவ, மாணவிகள் யாத்திரையுடன் இணைந்துகொண்டனர்.

நேற்றைய பாதயாத்திரையை நினைவு கூர்ந்து ஆலயங்களிலும் மற்றும் வழிபாட்டுத் தலங்களிலும் மணியோசை எழுப்பப்பட்டது. ஆங்காங்கே பாடசாலை மாணவர்களும் மற்றும் பொதுமக்களும் வீதியோரங்களில் வெள்ளைக் கொடிகளைத் தாங்கியவாறு நின்றனர்.

யாத்திரையில் கலந்துகொண்ட மக்களுக்கு மதிய உணவு, சிற்றுண்டிகள் மற்றும் குளிர்பானங்களை பொது அமைப்புக்களும் நலன்விரும்பிகளும் வழங்கி உபசரித்தனர்.

நேற்றைய பாதயாத்திரையில் தீவுப் பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்களும் பங்கேற்றனர்.

### மதத் தலைவர்கள் சொற்பொழிவு

சமாதான யாத்திரை கடந்து சென்ற பாதையெங்கும் ஆங்காங்கே சமயத் தலைவர்களின் உரைகள் இடம்பெற்றன.

யாத்திரை சென்ற வீதிகளில் வீதிக் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தும் பணிகளில் யாழ்., ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், அ.விநாயகமூர்த்தி மற்றும் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், புளொட் அமைப்பின் யாழ் அமைப்பாளர் செபஸ்ரியன் இருதயராஜன் மற்றும் கட்சிகளின் உறுப்பினர்களும் பாதயாத்திரையில் கலந்துகொண்டனர்.

தவிர்க்க முடியாத காரணங்களால் நேற்றைய சமாதான யாத்திரையில் கலந்துகொள்ளமுடியவில்லை எனவும் -

இன்று இடம்பெறும் யாத்திரையில் கலந்துகொண்டு தமது பூரண பங்களிப்பை வழங்குவதாகவும் -

யாழ்.பள்ளிவாசல் மௌலவி எம்.எம்.முஹரிய்யத்தீன், யாழ்.நாக விகாரைக் குருவான ஞானரத்ன தேரர் ஆகியோர் சமாதானத்திற்கான சர்வமத பாதயாத்திரை ஒழுங்கமைப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

### வடமராட்சியிலிருந்து....

நேற்றைய பாதயாத்திரைக்கு ஆதரவு தெரிவித்து வடமராட்சி தொழில்சார் பண்பாட்டுப் பொது அமைப்புக்களின் மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் தும்பளை புனித லூர்து மாதா ஆலயத்தில் இருந்தும் பாதயாத்திரை ஆரம்பமானது. அது பிற்பகல் 2 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தை வந்தடைந்தது. இன்று காலை அங்கிருந்து புறப்பட்டு பருத்தித்துறை வீதியூடாக நல்லூர் ஆலயத்தை வந்தடையும். அங்கு வைத்து பிரதான பாதயாத்திரை அணியுடன் இணைந்து தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தைச் சென்றடையும்.

வடமராட்சியில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரையில் விசேடமாக பருத்தித்துறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி லால் குமார உட்பட பல மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஐ-10-8-9-1 1 7-183-182)

# குடாநாட்டுக்கு இரு மாதங்களில் 4,000 தொலைபேசி இணைப்புகள்

## உபகரணங்கள் கப்பலில் வருகின்றன

யாழ்ப்பாணம்,பெப்.24

அடுத்த 2 மாதங்களுக்குள் குடாநாட்டு மக்களுக்கு 4 ஆயிரம் தொலைபேசி இணைப்புக்களை வழங்கத் தேவையான நவீன உபகரணங்கள் ஒரிரு தினங்களில் இங்கு வந்து சேரவிருக்கின்றன.

நவீன உபகரணங்கள், புதிய பரிவர்த்தனை நிலையத்துக்கான பொருளகளை 'றுகுணுபுர' கப்பலில் ஏற்றுவது தொடர்பான விசேட வைபவம் ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இந்த உபகரணங்கள் வந்து சேர்ந்து அவை பொருத்தப்பட்டதும் குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கான சேவைகள் சீராகும் என ரெலிகொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-3)

# யாழ்.மருத்துவமனை முன்பாக நடுவீதியில் சைக்கிள் பாதுகாப்பு!

## போக்குவரத்துக்கு இடைஞ்சல்

யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியின் நடுவே திடீரென்று தோன்றியுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தினால் அப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி தோன்றியுள்ளது.

இருபக்க பாதைகளின் நடுவே உள்ள பகுதியில் நிறுத்தப்படும் சைக்கிள்களுக்கு யாழ். மாநகராட்சியின் முத்திரையுடன் கூடிய சீட்டுகள் வழங்கப்படுகின்றன. அதில் ஒரு ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ள போதும் அதைவிட அதிகமாகவே பாதுகாப்புக் கட்டணம் அறவிடப்படுகிறது.

வீதியின் இருபக்கங்களில் இருந்தும் வாகனங்கள் வருவதை கவனிக்காது, 'திடீர்' சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலிருந்து வீதியில் இறக்கப்படும் சைக்கிள்களால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வைத்தியசாலைக்கு பொதுமக்கள் செல்லும் பிரதான வாயிலுக்கு நேரே இப்பாதுகாப்பு நிலையம் அமைந்துள்ளதால் பொதுமக்களும் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்.மாநகரப் பகுதியில் நெருக்கடிகளையும், குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து வருவதாகத் தெரிவிக்கும் யாழ்.மாநகரசபை வீதிப் பாதுகாப்புக்கு முரணாக, வீதி ஒழுங்கைச் சீர்குலைக்கும் வகையில் கடந்த சில நாள்களாக நடத்தப்பட்டுவரும் இச் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் குறித்து கவனம் செலுத்தாதிருப்பது குறித்து பொதுமக்கள் விசனம் அடைந்துள்ளனர். (ஓ-8)

### நாம்பன் மாடு முட்டி மோதியதில் இளைஞர் படுகாயம்

வளர்ப்பு நாம்பன் மாடு துரத்தி வந்து முட்டி மோதியதில் அடிவயிற்றுப் பகுதியில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் நேற்று இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

கொக்குவில் பிறவுண் வீதியைச் சேர்ந்த பகவான் ஜெயக்குமார் (வயது 21) என்ற இளைஞரையே அவர் வளர்த்து வந்த நாம்பன் மாடு இடித்துக் காயப்படுத்தியது.

மாட்டை மேயக்கட்டிய இடத்தில் இருந்து நேற்று இரவு 7.30 மணியளவில் அவிழ்த்து வந்தபோது சிறுவன் ஒருவனை மாடு இடிக்க முற்பட்டதாகவும் -

அந்த சிறுவனை தூக்கிக் கொண்டு இளைஞர் ஓடமுற்படவே நாம்பன் இளைஞரின் அடிவயிற்றில் கொம்புகளால் குத்தி காயப்படுத்தியதாகவும் கூறப்பட்டது. (ஐ-6)

### கிரிக்கெட் சங்க கூட்டம்

யாழ்மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின செயற்குழுக் கூட்டம் இன்று காலை 10மணிக்கு யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் கட்டடத்தின் மேல்மாடியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டவர்களை மட்டுமே கூட்டத்துக்கு, சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

### உடற்கல்வி மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை முதலாம், இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு விரிவுரை மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு உடற்கல்வி மாணவர் மன்றத்தின் தலைவர் எம். சசிக்குமார் அறிவித்துள்ளார். (ஐ-6)

## மரண அறிவித்தல்

### சண்முகானந்தம் ஐயர் ஸ்ரீ முருகதாஸ் குருக்கள்

சண்முகானந்தம் ஐயர் ஸ்ரீமுருகதாஸ் குருக்கள் அவர்கள் நேற்று (23.02.2002) சனிக்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் இலங்காதேவியின் அன்புக் கணவரும் லக்ஷன், கஜீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிதம்பரநாதக் குருக்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2002) ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குருக்கள் பகுதி, கரணவாய், கரவெட்டி.*

தகவல்: சி.லோகநாதக்குருக்கள் (மாமன்)

## புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிய

# ஜனாதிபதியின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்கிறார் பீரிஸ்

கொழும்பு,பெப்.24

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உருவான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அது குறித்து ஜனாதிபதியுடன் பிரதமர் விரிவாக ஆராய்ந்தார். ஜனாதிபதியை அலட்சியம் செய்து உடன்பாடு கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று கூறப்படுவது ஆதாரமற்ற குற்றச்சாட்டு.

இப்படிக் கூறியுள்ளார் அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பாக தன்னுடன் ஆலோசிக்காது பிரதமர் தன்னிச்சையாக நடந்து கொண்டதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள குற்றச்சாட்டை மறுத்து நேற்று மாலை விடுத்த ஓர் அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமைச்சரவைக் கூட்டத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு ஜனாதிபதிக்கு அது அனுப்பிவைக்கப்பட்டது.

கடந்த இரு அமைச்சரவைக் கூட்டங்களில் ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லை. அமைச்சரவைக் கூட்டத்தில் உடன்படிக்கை தொடர்பாக ஆராயவுள்ளோம். எனவே கூட்டத்திற்கு வருமாறு பிரதமர் வலியுறுத்திய போதும் அவர் சமுகமளிக்கவில்லை. அதற்கு நாம் பொறுப்பாளிகளல்லர்.

ஆனாலும் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படுவதற்கு முதல்நாள் இரவு பிரதமர் ஜனாதிபதி மாளிகை சென்று உடன்படிக்கை தொடர்பாக விளக்கிக் கூறியிருந்தார். இந்நிலையில் ஜனாதிபதி உடன்படிக்கை தொடர்பாக அதிருப்தி தெரிவிக்க முடியாது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-3)

### உடன்படிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டறிந்து வருகின்றார்.

சமாதான முயற்சிகள் ஒருபுறம் நடக்க மறுபுறத்தில் படையினரை யுத்தநிலையில் வைத்திருக்கவே பிரதமர் விரும்புகிறார் என்று அரசியல் அவதானிகள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டில் விடுதலைப் புலிகள் கைச்சாத்திடுவார்களா என்ற சந்தேகம் வியாழக்கிழமை நண்பகல் வரை தமக்கு இருந்தது என்றும் -

அவர்கள் கைச்சாத்திட்ட விடயம் நோர்வேத் தூதர் மூலம் தெரிவிக்கப்பட்டதும் தாம் மிக்க மகிழ்ச்சி அடைந்ததாகவும் -

பிரதமர் திருமலையில் பேசுகையில் கூறினார்.

கடந்த 20 வருடங்களின் பின்னர் பிரதமர் ஒருவர் யுத்தபூமியான வடக்கு - கிழக்குக்கு விஜயம் செய்வது இதுவே முதல்முறையாகும்.

(ஐ-3-6)

### வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோர்கள் இந்த பஸ்களில் அழைத்துவரப்படுவர். அவர்கள் கொழும்பில் தங்கவைக்கப்பட்டு சிறைச்சாலைக்கு கூட்டிச்செல்லப்படுவர்.

பின்னர் அவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு திருப்பி அழைத்துச்செல்லப்படுவர். அதன்பின் இரண்டாவது கட்டமாக உறவினர்களின் மற்றொரு குழு கொழும்புக்கு அழைத்துவரப்படும்.

(ஐ-3)

### அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சன் பெர்னாண்டோ தமது அமைச்சின் கீழ்வரும் திணைக்களங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வார். கல்வித்துறையினர், விளையாட்டுத்துறையினர் ஆகியோரை அவர் சந்திப்பார்.

'சூழலியல், இயற்கை வளங்கள் பிரதி' அமைச்சர் இந்திக பண்டாரநாயக்க கரையோரப் பகுதிகளுக்கு சென்று கடலரிப்பு, இயற்கை வளங்கள் அழிதல் ஆகியன தொடர்பான பிரச்சினைகள் குறித்து தகவல் சேகரிப்பார்.

இந்த மூன்று அமைச்சர்களையும் சேர்ந்த செயலாளர்கள், அதிகாரிகள் ஆகியோரும் அமைச்சர்களுடன் கூட வருகின்றனர்.

இரு தினங்கள் இவர்கள் இங்கு தங்கியிருப்பர்.

இவர்களின் வருகைக்கான சகல ஏற்பாடுகளையும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

அமைச்சர்களுடன் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக ரணவக்க ஆகியோரும் வருகின்றனர்.

(ஐ-3)

### ரத்வத்தையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படமுடியவில்லை. கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் திருமதி ரத்வத்தையை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்ட நீதிவான் இரு புதல்வர்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு திருமதி ரத்வத்தைக்கு பணிப்புரை விடுத்திருந்தார். இரு புதல்வர்களும் தம்மோடு இல்லை என திருமதி ரத்வத்தை நீதிவானிடம் தெரிவித்திருந்தார். இந்நிலையில் குறித்த படுகொலையோடு தொடர்புபட்டிருந்த முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

அவரைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் கமலசபேசன் பணிப்புரை விடுத்தமைக்கு அமைவாக பொலீஸார் அவரைக் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்துள்ளனர். சரணடைந்த இரு புதல்வர்களும் இன்று தெல்தெனிய நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவர்.

மடவள சம்பவம் தொடர்பாக இவர்கள் இருவரும் விரைவில் அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்படுவர்.

(ஐ-3-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.